


விஜயா பதிப்பகம்

வழக்குச் சொல் விளக்கம்

சி.என். துரைராஜ்

வழக்குச் சொல் விளக்கம்

சி.என். துரைராஜ்

விஜயா பதிப்பகம்
20, ராஜ வீதி,
கோயம்புத்தூர் - 641 001.
vijayapathippagam2007@gmail.com

நூலின் பெயர்	:	வழக்குச் சொல் விளக்கம்
ஆசிரியர்	:	சி.என். துரைராஜ்
முதல் பதிப்பு	:	ஏப்ரல் 2010
வெளியீடு	:	**விஜயா பதிப்பகம்** 20, ராஜ வீதி, கோயம்புத்தூர் - 641 001. ✆ 0422-2382614 / 2385614
ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு	:	ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை - 15.
அட்டை வடிவமைப்பு	:	ஆர்.சி. மதிராஜ், சென்னை.
அச்சாக்கம்	:	ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5.
பக்கங்கள்	:	96
விலை	:	ரூ.35/-

ISBN - 81-8446-196-8

VAZHAKKU SOLL VILAKKAM

Author	:	C.N. DURAIRAJ
First Edition	:	April 2010
Published By	:	**VIJAYA PATHIPPAGAM,** 20, Raja Street, Coimbatore - 641 001. ✆ 0422-2382614 / 2385614
Layout & Laser type set	:	IRIS *Graphics*, Coimbatore - 15.
Cover Design	:	R.C. Mathiraj, Chennai.
Printed At	:	Jothy Enterprises, Chennai - 5.
Pages	:	96
Price	:	Rs.35/-

என்னுரை

ஆழ்ந்த கருத்துள்ள சொற்றொடர்களை, பிறரைப் பார்த்து நாம் பிரயோகிக்கும் வழக்கம் தொன்றுதொட்டே வந்துள்ளது. உதாரணமாக, போலியாக அழுபவனைப் பார்த்து ''முதலைக் கண்ணீர் வடிக்கிறான்யா'' என்று சொல்வார்கள். பொய்யாக அழுவதற்கும், முதலைக் கண்ணீர் வடிப்பதற்கும் என்ன சம்மந்தம்? அதுபோல் தன்னை ஏமாற்ற நினைப்பவனைப் பார்த்து, ''எனக்கு எப்பவோ காது குத்தியாச்சு, இன்னைக்கு நீ குத்த வேண்டாம்'' என்பார்கள். ஏமாற்ற நினைத்தவனுக்கும், காது குத்தியதற்கும் என்ன தொடர்பு? இதற்கெல்லாம் பொருள் தெரிந்து தான் சொல்கிறார்களா? என்ற சந்தேகம் எனக்குள் எழுந்தது!

வழக்கிலுள்ள இதைப் போன்ற சில சொற்றொடர்களை சேகரித்து, பலரிடம் சொல்லி, அதன் பொருள் என்ன? என்று கேட்டேன். ஒரு சிலர் மட்டும், ஒரு சிலவற்றிற்குப் பொருள் கொடுத்தார்கள். பெரும்பாலோரிடமிருந்து, ''எனக்கு அர்த்த மெல்லாம் தெரியாது'' என்ற பதில்தான் கிடைத்தது.

''மற்றவர்களை இகழவோ, புகழவோ, அறிவுறுத்தவோ இதைப் போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறீர்களே, அதன் பொருள் தெரிந்து, அதைச் சொல்ல வேண்டாமா?'' என்று கேட்டபோது,

''என்னமோ எல்லோரும் சொல்லறாங்களேன்னு, நாங்களும் சொல்றோம்'' என்றார்கள். இதைப்போன்ற

சொற்றொடர்களைச் சொல்லத் தெரியும், ஆனால், அதன் அர்த்தம் தெரியாது! என்பதைப் போல் அவர்கள் பதில் இருந்தது!

எல்லோரும் சொல்வதை நாங்கள் சொல்கிறோம், எல்லோரும் செய்வதை நாங்களும் செய்கிறோம் என்று, ஆராய்ந்து காரணத்தைக் கண்டுகொள்ளாமல், அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று சொல்லுவதோ, அதைச் செய்வதோ முன்செல்லும் ஆட்டை, பின் தொடரும் ஆட்டின் செயல் என்று எனக்குப் பட்டது!

அதனால்தான், இதைப்போன்ற சொற்றொடர்களைச் சேகரித்து, அதன் பொருள் விளக்கம் தந்து, நாம் ஏன் புத்தகமாக வெளியிடக் கூடாது? என்ற எண்ணம் எனக்குள் ஏற்பட்டது! விபரம் தெரிந்த பல பெரியோர்களைச் சந்தித்தும், என் நெருங்கிய நண்பர்கள் படித்தும், கேட்டும் ஞாபகத்தில் வைத்திருந்ததைச் சொல்லியதையும், வார, மாத இதழ்களையும், புத்தகங்களையும் புரட்டி, நான் சேகரித்த விபரங்களின் தொகுப்புதான் இந்தப் புத்தகம்!

இதைத்தவிர! மேலும் பல அரிய விஷயங்களைத் தொகுத்து, 'ஏனென்றால்? எதற்கென்றால்? எப்படியென்றால்?' என்ற தலைப்பிலும், அதைத்தவிர, நாம் உண்மைக்குப் புறம்பாக சிலவற்றைப் பேசுவதை, 'சொல்லுவதெல்லாம் உண்மையல்ல!' என்ற தலைப்பைக் கொடுத்தும் நான் சேகரித்த சில விபரங்களை இத்துடன் சேர்த்துள்ளேன்.

இதில் ஆன்மீகக் கருத்துகள் நிறைய இடம்பெற்றுள்ளன. "ஆன்மீகத்திலே நாட்டமில்லாத நீ, அந்தக் கருத்துக்களையும் சேகரித்து விளக்கம் கொடுத்துள்ளாயே?" என்று என் நண்பர்கள் என்னைக் கேட்டபோது, "இந்தப் புத்தகத்தின் கருத்து ஆத்திக, நாத்திகவாத விளக்கத்தைச் சொல்லுவதல்ல! அது இதன்

நோக்கமும் அல்ல! நாத்திகவாதி என்றாலும், ஆத்திகவாதி என்றாலும், அவர்களும் பொருள் புரிந்து பேச வேண்டும். தங்களுக்கே புரியாத ஒன்றை, அடுத்தவர்கள் மீது திணிக்க நினைப்பது எப்படி சரியாகும்? யாராக இருந்தாலும் சொல்லப் படும் சொற்களுக்கும், செய்யப்படும் செயலுக்கும் விளக்கம் தெரிந்திருக்க வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம்!'' என்றேன்.

இந்தப் புத்தகத்தைப் பற்றி இறுதியாக ஒரு விளக்கம்.

ஒரு தாய், தன் மகனை அடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த பண்டிதநேரு, ''எதனால் அவனை அடிக்கிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அந்தத் தாய், ''பக்கத்திலே இருந்த மாணவனைப் பார்த்து, இவன் காப்பி அடித்திருக்கிறான்'' என்று சொன்னாள்.

''ஒருவரைப் பார்த்து, ஒருவர் எழுதினால் அது காப்பி! பல பேர் எழுதியதை தொகுத்து எழுதினால் அது ஆராய்ச்சி!'' என்றாராம் நேரு. இதைத்தான் நான் செய்திருக்கிறேன். பலர் சொல்லியதையும், பல இதழ்களில் நான் படித்ததையும் தொகுத்து என் நடையில் கொடுத்துள்ளேன். இதில் என் சொந்தக் கருத்துக்களும் பல இடம்பெற்று உள்ளன! அது எனக்குள்ள உரிமையாகவே நான் கருதுகிறேன்.

இந்த நூலை வெளியிட்ட விஜயா பதிப்பகம் திரு. வேலாயுதம் அய்யா அவர்களுக்கும், நல்ல முறையில் புத்தகம் வடிவமைத்தும், முன் அட்டை தயாரித்தும் சிறந்த முறையில் அச்சிட்ட தொழிற் கலைஞர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி! புத்தக வடிவில் இது என் முதல் பிரசவம்! எத்தனையோ வலிகள் இருந்தாலும், இதைப் பெற்றெடுத்து, உங்கள் கைகளில் தவழ விட்டிருக்கிறேன். தாலாட்டுங்கள்! தவறு இருந்தால், திருத்துங்கள்.

அன்புடன்

சி.என். துரைராஜ்

உள்ளே...

வழக்குச் சொல் விளக்கம்

அ முதல்...

...அ...

☞ **அஞ்சும், மூணும் அடுக்கா இருந்தா அறியாத பொண்ணும் கறி சமைப்பா...**

ஒரு பெண்ணின் சமையல், சுவையாக இருப்பதற்கு அஞ்சும், மூணும் அடுக்காக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். அது என்ன அஞ்சும், மூன்றும்...? அடுப்பறையில் 'அஞ்சறைப் பெட்டி' என்று ஒன்றிருக்கும். ஐந்து அறைகள் கொண்ட அந்தப் பெட்டியில், கடுகு, மிளகு, சீரகம், சோம்பு, பருப்பு என தாளிக்கும் பொருட்கள் இருக்கும். முக்கியமாக சுவைக்கு உப்பு, மிளகாய், புளி இவைகளைச் சேர்த்து, அஞ்சறைப்பெட்டியில் உள்ள பொருட்களைக் கொண்டு தாளித்தால், பச்சை வாசம் அடங்கி, சுவையான சமையல் கிடைக்கும். தேவையான பொருட்கள் இருந்தால், எந்தப் பொண்ணும் சுவையாக சமைப்பாள் என்பதுதான் இதன் பொருள்.

☞ **அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா.**

பிள்ளையார் பிடிக்க அது குரங்காய் முடிந்தது என்பார்கள். களிமண்ணால் பிள்ளையார் பிடித்தால் அது சரியாக வந்தால்

பிள்ளையார். சற்று மாறிவிட்டால் வேறு ஏதோ போல் ஆகிவிடு கிறது! அதுபோல், தந்தையோடு பிறந்த பெண் 'அத்தை' ஆகிறாள். அதுவே, மீசை முளைக்கும் ஆணாக இருந்தால், 'சித்தப்பா' என்றுதான் அழைக்கிறோம். அத்தையின் மகளை திருமணம் செய்து கொள்ளலாம். சித்தப்பாவின் மகளை 'சகோதரி' என்றுதான் அழைக்க வேண்டும். இருவரும் தந்தையோடு பிறந்தவர்களாக இருந்தாலும், மீசை வளராத காரணத்தால் பெண்களை 'அத்தை' என்றும், மீசை முளைக்கும் ஆண்களை 'சித்தப்பா' என்றும் அழைக்கிறோம். இதைத்தான் ''அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா'' என்றார்கள்.

☞ அம்மி மிதித்து, அருந்ததி பாருங்கள்!.

அம்மி மிதித்து, அருந்ததி பார்ப்பது என்பதை, திருமணங் களில் ஒரு சடங்காகச் செய்கிறார்கள். அது எதற்கு? இதை எப்படிச் செய்கிறார்கள்? மணமகன், மணப்பெண்ணின் வலது கால் கட்டைவிரலைப் பற்றி அம்மிக்கல் மீது வைப்பான். அந்தக் கல்லைப்போல், கடினமான மனஉறுதியோடும், எந்தச் சூழ்நிலையிலும் கற்பு நெறி தவறாமல், நேர்மையோடும் இருப்பேன் என்று அந்த மணப்பெண் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்கிறார்கள். இதை 'அம்மி மிதித்தல்' என்பார்கள்... அருந்ததி பார்ப்பது என்பது, வானத்தில் சப்தரிஷி மண்டலம் என அழைக்கப்படும் நட்சத்திரக் கூட்டம் உள்ளது. இது ஏழு ரிஷிகளின் பெயர்களை வைத்து அழைக்கப்படுகிறது. அதில் ஒன்று வசிஷ்ட நட்சத்திரம். வசிஷ்டரும், அருந்ததியும் இணைபிரியாத தம்பதிகள். வசிஷ்டரின் மனைவி அருந்ததி கற்பில் சிறந்தவளாக கருதப்படுபவள், கணவனை மதிப்பவளாகப் போற்றப்படுபவள்.

எனவே, அருந்ததியைப் போல், கணவன் மனதை அனுசரிப்பவளாக பெண் இருக்க வேண்டும் என்பதற்காக அந்த நட்சத்திரத்தைக் காட்டுவார்களாம். தம்பதிகள் இருவரும், அருந்ததியும், வசிஷ்டரும் போல் இணைபிரியாமல், சிறந்த தம்பதிகளாக வாழ வேண்டும் என்று வாழ்த்துவதே இந்தச் சடங்கின் நோக்கம்!

☞ அரச மரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாளாம்...

அரச மரத்திற்கு பல மருத்துவ குணங்கள் உண்டு! குழந்தைப்பேறு இல்லாதவர்கள் அதைச் சுற்றி வந்தால், அம்மரத்திலிருந்து வெளிப்படும் காற்று, சுவாசத்தின் வழியாக உட்சென்று கர்ப்பப்பை கோளாறுகளை நீக்குகிறது. அதனால், பெண்களின் சூலகம் தூண்டப்பட்டு, அவர்கள் மலட்டுத் தன்மை நீங்கி குழந்தை பெறும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். இதை மருத்துவத்திலும் சொல்லுகிறார்கள். அதனால்தான் குழந்தை இல்லாதவர்கள் அரசமரத்தைச் சுற்றி வருகிறார்கள். உடனே அடிவயிற்றை தொட்டுப் பார்ப்பது என்பது, அவர்களுக் குள்ள அவசரத்தை இப்படி கேலியாக சொல்லி இருப்பார்கள்.

☞ அடி உதவற மாதிரி அண்ணன், தம்பியும் உதவ மாட்டாங்க.

அடிமேல் அடி அடித்தால் வழிக்கு வருவார்கள். அதனால் கிடைக்கும் பலன் அண்ணன், தம்பிகள் உதவியினாலும் கிடைக்காது! என்று சிலர் இதற்கு பொருள் சொல்வார்கள். ஆனால், உண்மைப் பொருள் அதுவல்ல! நல்ல வழியில் நடந்து செல்லும், அனுபவப் பெரியோர்களின் 'அடியை' (பாதையை)

நாம் பின்பற்றினால், அது நமக்கு நல்லது செய்வதுபோல், அண்ணன், தம்பிகள்கூட செய்ய முடியாது! என்பதாகத்தான் இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

☞ அடி மாட்டு விலை.

மாடுகள் உழைக்கத் தகுதி இல்லாமல் வயதாகி மெலிந்து விட்டால், அதை 'கசாப்பு' கடைக்கு விற்று விடுவார்கள். விவசாயத்திற்கோ, பாரம் சுமக்கவோ, அது பயனில்லாததால், கடைக்காரர்கள் அதைக் கேட்டு வாங்கிச் செல்வார்கள். அது வெட்டப்பட்டு, அதன் இறைச்சி எடை போட்டு விற்கப் படுவதால், 'அடி மாடு' என்று சொல்வார்கள். அது 'அடி மாடு' என்பதால் குறைந்த விலைக்கே கேட்பார்கள். இதைத்தான் ஒரு பொருளை மிகக் குறைந்த விலைக்குக் கேட்பவர்களைப் பார்த்து, ''அடி மாட்டு விலைக்கு கேட்கறயேப்பா'' என்பார்கள்.

☞ அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு.

'ஒரு பொண்ணுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இந்த நாலு குணம் இருந்தாத்தான் பெருமை' - என்று சொல்வார்கள். இந்த நாலு குணங்களின் பொருள் என்ன?

அச்சம் - பெண்கள் கரப்பான் பூச்சியையும், பல்லியையும் கண்டுகூட பயப்படுவார்கள்! காரணம், அது கடித்து, உயிரைக் குடித்துவிடுமோ என்ற பயமல்ல! அது தன் மேல் விழுந்து ஊர்ந்து செல்லும்போது ஏற்படுகின்ற அருவருப்புதான்! இதுதான் அவர்களின் மென்மையான குணத்தையும், உடலின் மிருதுவான தன்மையையும் வெளிப்படுத்துகிறது! எனவே, அந்த **'அச்சம்'** வேண்டும்.

மடம் - தெரிந்தும் தெரியாததைப் போல் இருப்பதுதான் மடம்! தனக்கு எது தெரிந்திருந்தாலும், அவசரப்பட்டு, படபடவென்று பேசி, மற்றவர்கள் பேசவிடாமல் செய்து, எல்லாமே எனக்குத் தெரியும் என்று காட்டிக்கொள்வதை விட, தனக்கு எதுவுமே தெரியாததுபோல் அமர்ந்திருந்து, மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு, நிதானமாக தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும். அதுவரை ***'மடமாகவே'*** இருக்க வேண்டும். இதுவே அவர்களுக்குப் பெருமை!

நாணம் - இது ரொம்ப முக்கியம்! நாணப்படுவது என்பது, ஒரு தனி அழகு! ஒரு பெண்ணைப் பார்த்து, "அடடா... இந்த நெக்லஸ் உனக்கு எவ்வளவு அழகாய் இருக்கு!" "இந்தப் புடவை கலர் உனக்கு ரொம்ப மேட்ச்! இதிலே நீ சிரிச்சாலே இந்த உலகம் மயங்கிடும்!" என்று புகழ்ந்தால், அவர்களுக்கு ஆணவம் வரக்கூடாது. ***'நாணம்'*** தான் வரவேண்டும். நம்மை இப்படிப் புகழ்கிறார்களே என்று 'வெட்கம்' வரவேண்டும்! அந்த வெட்கம் வரும்போது, அந்தப் பெண்ணின் முகம் சிவந்து விடும்! அந்த சிவப்பு அழகுக்கு நிகராக பெண்களுக்கு உலகத்தில் வேறு எந்த அழகுமில்லை!

பயிர்ப்பு - இரயிலிலோ, பஸ்சிலோ, கூட்ட நெரிசலிலோ செல்லும்போது, ஆணின் உடல் ஒரு பெண்ணின்மீது பட்டால், அது அவர்களுக்கு உறுத்தலாக இருக்க வேண்டும். அருவருப் பாகவோ, அசூசையாகவோ பட வேண்டும்! தனக்கு எந்த வகையிலும் சம்மந்தமில்லாத வேற்று ஒரு ஆணின் உடல் தம்மீது படும்போது, அது உறுத்தலாகி, சங்கடப்படுவதைத்தான் ***'பயிர்ப்பு'*** என்று சொல்வார்கள். ஆக, இந்த நான்கு குணங்களும் பெண்களுக்குப் பெருமை!

☞ அவன் உதவாத உப்புச் சாக்கு.

உப்பு இருந்த சாக்குப்பை ஒன்றுக்கும் உதவாது! அது காற்றுப் பட்டு திரிந்து பயனில்லாமல் போய்விடும். வேறு தானியங்களுக்கும் அதை உபயோகப்படுத்த முடியாது! அதுபோல... எதற்கும் உதவாதவர்களை, உப்பிருந்த சாக்கிற்கு ஒப்பிட்டுச் சொல்வார்கள்.

☞ அத்ரிபாட்ச்சா

ஒருவன் தான் சாதித்தவைகளை பெருமையாகச் சொல்லிக் கொண்டிருப்பான். அவனைச் சுற்றி உள்ளவர்கள் 'அத்ரிபாட்ச்சா கொழுக்கட்டை' என்று சொல்லுவார்கள். பொழுதுபோகாமல் கூடி நின்று பேசும்போது, பேசுபவனை குஷிப்படுத்த இப்படிச் சொல்வதுண்டு! அது என்ன அத்ரிபாட்ச்சா கொழுக்கட்டை? ஒருவன் திருமணமான புதிதில் மாமியார் செய்து கொடுத்த கொழுக்கட்டையை ருசித்துச் சாப்பிட்டுவிட்டு, வீடு திரும்பினான். அதைப் போன்ற பலகாரத்தை அவன் இதற்கு முன் சாப்பிட்டதே இல்லை! அது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது! வீட்டிற்குச் சென்று மனைவியினிடம் அதை செய்து கொடுக்கும்படி கேட்க வேண்டும் என்று அதன் பெயரை மறக்காமல் இருக்க "கொழுக்கட்டை" "கொழுக்கட்டை" என்று சொல்லிக் கொண்டே நடந்தான். வழியில் ஒரு குட்டை குறுக்கிடவே அதை வேகமாகத் தாண்டும்போது, "அத்ரிபாட்ச்சா" என்று அவன் வாய் தவறிச் சொன்னான். அதையே அவன் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு, வீட்டுக்கு வந்தவன் மனைவியிடம் "எனக்கு அத்ரிபாட்ச்சா செய்துகொடு!" என்று கேட்டான். அவள் தனக்கு "அது என்னவென்றே தெரியாது" என்று சொல்ல, "ஏய்! நீ செய்து கொடுக்க சோம்பேறித்தனப் பட்டு மறைக்கிறாய்" என்று அவள் முதுகில் இரண்டு அடி

போட்டானாம். அவள் கத்த, அக்கம்பக்கத்தார் வந்து என்ன வென்று விசாரித்தார்கள். இவன் விபரம் சொல்ல, "அதென்னப்பா அத்ரிபாட்ச்சா...?" போகட்டும், அதுக்காக இப்படியா அடிப்பது! "கொழுக்கட்டை மாதிரி வீங்கி இருக்கே!" என்றார்கள். "ஆமா, ஆமா அதுதான், கொழுக்கட்டைதான் கேட்டேன்" என்றான் அவன். எல்லோரும் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள். அடிபட்ட அவன் மனைவி உள்பட! இதுதான் "அத்ரிபாட்ச்சா கொழுக்கட்டை".

☞ அரசனை நம்பி புருஷனைக் கைவிடாதே!

அரசமரத்தைச் சுற்றி வந்தால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை பலருக்கு உண்டு! அரச மரத்தில் மருத்துவ குணம் இருப்பதால், இது சாத்தியம் என்று மருத்துவமும் கூறுகிறது. அந்த மரத்திலிருந்து வெளிப்படும் 'பிராண வாயு' பெண்களின் கருப்பை கோளாறுகளை நீக்கி, கணவனோடு சேரும்போது கருத்தரிக்கச் செய்யும் வாய்ப்பை உண்டாக்குகிறது. ஆனால், சிலர் அரச மரத்தைத்தான் சுற்றி விட்டோமே இனி நமக்கு கருதரித்து விடும் என்று மனைவி கணவனை நெருங்காமல் விட்டுவிட்டால் பயன் எப்படி கிடைக்கும்? அதனால்தான், "அரசனை நம்பி புருஷனை கைவிட்டு விடாதே!" என்று சொன்னார்கள்.

...ஆ...

☞ ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே.

கருவை வயிற்றில் சுமந்து, அதற்கு உயிரூட்டி, உருவாக்குவது பெண்தான்! ஒரு மனித உயிர் உருப்பெறுவதே பெண்ணாலே என்றால், அழிவதற்குக் காரணமும் அவள்தான்

என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அழிவிற்கு ஆண்கள் அப்பாற்பட்டவர்களா? பெண்களை விட, ஆண்களே குடியும், சூதாட்டமும், தீய வழிகளில் சென்றும், தங்கள் குடும்பத்தின் அழிவிற்குக் காரணமாக இருக்கிறார்கள். இங்கே 'அழிவதும் பெண்ணாலே' என்பது, தன் குடும்பத்திற்கும், கணவனுக்கும் ஏற்படும் அல்லல்கள் அழிவதும் அந்த வீட்டுப் பெண்ணாலே என்று எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறார் வாரியார் அவர்கள். நல்லவை ஆவதும் பெண்ணாலே என்பதைப் போல், தீயவை அழிவதும் பெண்ணாலே என்று பொருள் கொள்ளுங்கள்'' என்று சொல்வார்கள்.

☞ **ஆடிக்கு அழைக்காத மாமியாரைத் தேடி உதை.**

திருமண நிச்சயத்தின்போதே, பெண் வீட்டாரிடம் புதுமணத் தம்பதியரை மூன்று பண்டிகைகளுக்கு கண்டிப்பாக அழைக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்திருப்பார்கள். பொங்கல், தீபாவளி போல் ஆடிப்பண்டிகையும் அதில் முக்கியமானது! அந்த மாதத்தில் தம்பதியரை அழைத்து, மாப்பிள்ளைக்கு ஆடிப் பால் கொடுத்து அனுப்பிவிட்டு, மகளை வீட்டோடு வைத்துக் கொள்வார்கள். ஆடி மாதம் முடிந்துதான் கணவன் வீட்டுக்கு அவளை அனுப்புவார்கள். இதன் காரணம்? புதுமணத் தம்பதியர் ஆடியில் கூடி, சித்திரை, வைகாசியில் குழந்தை பிறந்தால், அந்த மாதங்களின் கடும் வெயிலால் பிரசவ கஷ்டத்தோடு, பிறந்த குழந்தையும் பாதிக்கப்படும் என்ற பயம்தான்.

☞ **ஆமை புகுந்த வீடும்,**
அமீனா புகுந்த வீடும் உருப்படாது.

ஆமை என்பதை இங்கு, 'பொறாமை', 'இயலாமை', 'முயலாமை', 'துணியாமை' போன்றவைகளைத்தான் சொல்ல

வேண்டும். இந்த ஆமைகள் வீட்டில் புகுந்தால், அந்த வீடு எப்படி உருப்படும்? அதுபோலே வாங்கிய கடனை திருப்பச் செலுத்த முயற்சிக்காமல், அமீனா வீட்டுக்கு வரும்வரை விட்டுவிட்ட, திட்டமிடாதவர்கள் வீடும் உருப்படாது என்பதுதான் இதன் பொருள்! இனியொன்றையும் சொல்லு வார்கள். ஆமைகள் வேகமாக வரமுடியாது! மெதுவாக நகர்ந்துதான் வரும். அது வீட்டிற்குள் நுழைவதற்கு நாள் கணக்காகக்கூட ஆகலாம்! அதுவரை ஆமை நுழைவதைக்கூட கவனிக்காத, விழிப்புணர்ச்சி இல்லாதவர்கள் வீடு உருப்படுமா? கடின உழைப்போடும், நல்ல விழிப்புணர்ச்சியோடும் வாழ்ந்தால்தான் அந்த வீடு வீடாக இருக்கும்! என்பதற்காக இதைச் சொன்னார்கள்.

☞ ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.

வைத்தியனிடம் சென்ற ஒருவன் இறந்தாலே, ஊர் அவனை 'ராசி' இல்லாதவன் என்று ஒதுக்குகிறது. ஆயிரம் பேரைக் கொன்றால், ஊர் மக்கள் அவனை அங்கு விட்டு வைத்திருப்பார்களா? இது தவறு! ஆயிரம் 'வேரை' கொன்றவன் அரை வைத்தியன் என்பதுதான் சரி. அதாவது, மருத்துவ மூலிகைகள் பல ஆயிரம் இருக்கின்றன! அந்த மூலிகைகளைக் கண்டுபிடித்து, ஆயிரம் வேர்கள் வரை பிடுங்கி, அதை அரைத்து வைத்தியம் பார்த்தாலே, அவன் அரை வைத்தியன்தான். ஏனென்றால், அவன் கண்டுபிடித்து தெரிந்து கொள்ள இன்னும் பல ஆயிரம் மூலிகைகள் இருக்கிறது என்பதால், அவனை அரை வைத்தியன் என்றுதான் சொல்வார்கள். அவன் கொன்றது ஆயிரம் பேரை அல்ல! ஆயிரம் வேரை! அது மண்டிக்கிடக்கும் மூலிகைச் செடிகளின் சிறப்பை எடுத்துச் சொல்வதற்காகச் சொல்லப்பட்டது!

☞ ஆடிக்காற்றில் அம்மியும் நகரும்.

ஆடிக்காற்றில் அம்மி நகருமா? ஆடிமாதத்தில் அதிவேக மாகக் காற்றடித்தாலும் அம்மி நகராது! இதற்கு வேறு அர்த்தம் உண்டு! அது என்ன? ஆடிக்கு முன் மாதங்கள் கோடை வெயில் வீசும் மாதங்கள். சித்திரையில் 'கத்திரி' வெயில் என்பார்கள். அம்மாதங்களில் அடிக்கும் வெயிலின் தாக்கத்தால் பலருக்கு அம்மை நோய் வரும்! ஆடியில் வரும் காற்றும், சாரல் மழையும் குளிர்ச்சியை ஏற்படுத்தி, பூமியின் சூட்டைத் தணிக்கும். அதனால் அம்மை கண்டவர்கள் குளுமை அடைந்து, குணம் பெறுவார்கள்! ஆடிக்குப் பின் அம்மை நோய் போய்விடும்! அதனால்தான் 'ஆடிக்காற்றில் அம்மையும் நகரும்' என்றார்கள். அதைத்தான் 'ஆடிக்காற்றில் அம்மியும் நகரும்' என்றாயிற்று என்கிறார்கள்.

☞ ஆளைக் கண்டு மயங்காதே, ஊது காமாலை.

தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடக் கூடாது! ஊது காமாலை நோய் உள்ளவர்கள் உடல் பெருத்து, பருமனாகத் தெரிவார்கள். அது பலமுள்ள சதை அல்ல! நோயினால் ஏற்பட்ட வீக்கம்! அதை பலம் என்று நம்பி ஏமாந்துவிடக் கூடாது. அதைப்போல, எதையும் தீர விசாரித்து தெரிந்துகொண்டுதான் முடிவு செய்ய வேண்டும். அது பலமா? வீக்கமா? என்ற வித்தியாசத்தைப் புரிந்துகொண்டுதான் அவர்களை நம்ப வேண்டும். அதனால்தான் "ஆளைக் கண்டு மயங்காதே, ஊது காமாலை" என்று சொன்னார்கள்.

☞ ஆனா அச்சிலே, ஆகாட்டி மொடாவுலே.

ஒரு சில காரியங்களைச் செய்யும்போது, அது சரியாக வராவிட்டால் "ஆனா அச்சிலே வாரு, ஆகாட்டி மொடாவுலே

வாரு'' என்பார்கள். இது எப்படி வந்ததென்றால், கரும்புச் சாற்றைக் காய்ச்சி வெல்லம், கருப்பட்டி செய்வார்கள். அந்த வெல்லப்பாகை மர அச்சில் ஊற்றி, சூடு ஆறிய பிறகு அதை தட்டி எடுப்பார்கள். அது அச்சுக் குழையாமல் வந்தால் சரி. உடைந்தோ, உருமாறியோ வந்தால், நஷ்டம் ஒன்றுமில்லை. மீண்டும் அதை பாத்திரத்திலே போட்டு காய்ச்சி ஊற்றலாம். அதனால்தான் ''ஆனா அச்சிலே வாரு, ஆகாட்டி மொடாவிலே வாரு'' என்றார்கள். (மொடா என்பது பெரிய பாத்திரம்).

☞ ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்!

ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவது பச்சாதாபத்தினாலோ, பரிதாபத்தினாலோ அல்ல! அதை தனக்கு உணவாக்கிக் கொள்ள காத்திருக்கும்போது, அது மழையிலே நனைந்து, அதற்கு ஏதாவது நோய் வந்துவிட்டால், தன் ஆகாரம் கெட்டு விடுமே என்ற சுயநலத்தினால்தான். இதைப்போல்தான், சிலர் தான் அடைய நினைத்துக் கொண்டிருக்கும் பொருளுக்கு கேடு வராமல், அதன் மேல் அக்கறை கொண்டு, அதையே கவனமாகக் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள்.

☞ ஆசை அறுபது நாள்; மோகம் முப்பது நாள் ஆக 90 நாள்.

ஒரு குழந்தை தான் அடம்பிடித்து வாங்கிய பொருளை கொஞ்ச நாட்கள் ஆசையாய் வைத்திருக்கும். பிறகு அதைப் பார்க்கும்போது மட்டும் கையிலெடுத்து வைத்துக்கொள்ளும். அதன் பிறகு அதை ஏறெடுத்தும் பார்க்காது. அதுபோலே, திருமணம் ஆன புதிதில் கணவன், மனைவி ஆசையோடு பழகுவார்கள். அது அறுபது நாள் நீடிக்கும். பிறகு மோக போதையில் இருப்பார்கள். இது முப்பது நாள் நீடிக்கும்.

ஆக, 90 நாளைக்குப் பிறகு ஏனோதானோ என்றாகி விடுவார்கள். அதன் பிறகு அது தொடர்ந்தாலும் இந்த 90 நாள் மகிழ்ச்சியைப் போல அது இருக்காது என்பதாக இப்படிச் சொல்வார்கள்.

☞ ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.

எதற்கும் துணிந்து நிற்க வேண்டும். 'சாவு' என்பது தவிர்க்க முடியாதது! அது ஆறு வயதிலும் வரலாம், நூறு வயதிலும் வரலாம் என்பதற்காக இப்படிச் சொல்வார்கள். ஆனால், இதற்கு வேறு விளக்கம் சொல்லப்படுகிறது. குருஷேத்திரப் போரின்போது, குந்திதேவி, கர்ணன் தன் மூத்தமகன் என்று தெரிந்துகொண்டு, பாண்டவர்களோடு சேர்ந்து, கௌரவர்களை எதிர்த்துப் போரிடச் சொன்னாளாம். கர்ணனோ, ''தாயே! பாண்டவர்கள் ஐந்து பேரோடும் சேர்ந்து ஆறாவது ஆளாகப் போரிட்டாலும் சரி, அவர்களை எதிர்க்கும் கௌரவர்கள் நூறு பேரோடும் சேர்ந்து போரிட்டாலும் சரி, எனக்கு சாவு என்பது நிச்சயிக்கப்பட்டு விட்டது! அந்த ஆறுபேரோடும் சாவுதான்! இந்த நூறுபேரோடும் சாவுதான்! துரியோதனன் எனக்குச் சோறிட்டவன். அந்த செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்காக, அவர்களோடு சேர்ந்தே போரிடுவதுதான் நியாயம்!'' என்றானாம். இதைத்தான் ''ஆறிலும் சாவு, நூறிலும் சாவு'' என்கிறார்கள்.

☞ ஆலும், வேலும் பல்லுக்குறுதி!
நாலும், ரெண்டும் சொல்லுக்குறுதி!

அந்தக் காலத்தில், ஆலமரக் குச்சியையும், வேப்பமரக் குச்சியையும் உடைத்து பல் துலக்குவார்கள். இன்றைக்கும், சில கிராமங்களில் இதைப் பார்க்கலாம்! அந்த மரத்திலுள்ள மருத்துவ குணத்தால், ஈறுகளில் உள்ள நீர்கள் ஈர்க்கப்பட்டு,

பல் உறுதியாகும்! வாயிலே புண் இருந்தாலும் அதை குணமாக்கும் தன்மை அதற்கு உண்டு! அதுபோல், நாலும் என்றால், நான்கு அடிகளைக் கொண்ட 'நாலடியார்' செய்யுளைக் குறிக்கும்! ரெண்டும் என்றால், இரண்டு அடிகளைக் கொண்ட 'திருக்குறளாகும்!' இந்த இரண்டையும் சரிவர கற்றுக்கொண்டு பேசினால், எதையும் உறுதியாகப் பேசலாம் என்பதுதான் இதன் பொருள். இது நாலடியாருக்கும், திருக்குறளுக்கும் உள்ள வலிமையை எடுத்துக் காட்டுகிறது!

...இ...

☞ இலவு காத்த கிளி போல்...

இலவங்காய் என்பது, இலவம் பஞ்சை உள் அடக்கியது. அது பச்சை நிறத்திலே, கோமாங்காய் போல் இருக்கும்! அதைப் பார்த்த கிளி, நாளை இது பழுத்து, சுவையான பழமாகும் என காத்திருக்கும். ஒவ்வொரு நாளும் அதை வந்து பார்த்துச் செல்லும். அது ஒரு நாள் வெடித்து பஞ்சு வெளிப்படும்போது, அது பழுக்கும் என்று நினைத்திருந்த கிளி ஏமாந்து போகும்! அதைப்போல, தனக்கே கிடைக்குமென்று ஒன்றுக்காகக் காத்திருந்தவர்களோ, முறைக்காக திருமணம் செய்ய ஆணோ, பெண்ணோ எதிர்பார்த்து, அது கைதவறிப் போய் விட்டாலோ, ''இலவு காத்த கிளிபோல'' ஆயிடுச்சு அவங்க நெலமெ'' என்று சொல்லுவதுண்டு!

☞ இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.

மடம் என்பது வழிப்போக்கர்கள் வந்து சிறிது நேரம் களைப்பாறி விட்டுச் செல்லும் இடம்தான். தங்க வந்த ஒருவன்

அந்தச் சலுகையைப் பயன்படுத்தி மடத்தையே அபகரிக்க முயன்றதைப்போல, தனக்குக் கிடைத்த வாய்ப்பை சாதகமாக்கிக் கொண்டு, சலுகை கொடுத்தவர்களையே பதம் பார்க்க நினைப்பவர்கள் உண்டு! அவர்களைப் பார்த்துதான் இப்படிச் சொல்வார்கள். ஆனால், இதையே ஆன்மீகவாதிகள் வேறு பொருள்பட சொல்கிறார்கள். ''நம் இதயத்தில் இறைவனுக்கு இடம் கொடுத்தால், நமது மடம் என்ற அறியாமையை பிடுங்குவான்'' என்றும் சொல்கிறார்கள்.

☞ இக்கரைக்கு அக்கரை பச்சை.

ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருப்பவர்கள், ஒரு கரையிலே நின்று மறுகரையைப் பார்த்தால், அந்தக் கரை 'பச்சைப்பசேல்' என்று தெரியும்! இங்குவிட, அங்கு பசுமையாக இருக்கிறதே என்று நினைத்து, அங்கே சென்று மேய்க்க ஆசைப்படுவார்கள். அந்தக் கரைக்குச் சென்று, இந்தக் கரையைப் பார்த்தால், இது பசுமையாகத் தெரியும்! 'அடெ, அங்கேயே மேய்த்திருக்கலாமே!' என்று நினைப்பார்கள். தூரத்திலே இருந்து பார்க்கும்போது, புல், பூண்டுகளுக் கிடையிலே உள்ள காய்ந்த பகுதி கண்ணுக்குத் தெரியாது! செடி, கொடிகளின் பச்சை நிறம்தான் தெரியும்! இதைத்தான் 'இக்கரைக்கு அக்கரைப் பச்சை'' என்றும், ''தூரத்துப் பச்சை'' என்றும் சொல்வார்கள். அதைப்போல், இருக்கும் இடத்திலே இருந்து மற்றோரிடத்தைப் பார்க்கும்போது அது சிறப்பாகத் தெரியும்! ஆனால், அதை நம்பி இருக்கும் வேலையையும், உள்ள வசதியையும் இழந்துவிடக் கூடாது என்பதற்காக இதைச் சொன்னார்கள்.

☞ இருதலைக் கொள்ளி எறும்புபோல்

இரண்டு பக்கமும் மாட்டிக் கொண்டு தப்பிக்க முடியாமல் தவிப்பவர்கள் "இரு தலைக் கொள்ளி எறும்பாய் இருக்கேன்" என்று புலம்புவார்கள். இது எதுபோல் என்றால், மூங்கில் போன்ற துளை உள்ள கட்டைகளில் எறும்புகள் நுழைந்து கொள்ளும். அது உள் இருக்கும்போது, அந்த கட்டைகளின் இரு பக்கமும் திடீரென்று தீ பிடித்து, அது எரிய ஆரம்பித்தால், எறும்புகள் எந்தப் பக்கமும் வெளியே வர முடியாமல் தவிக்கும்! இதுபோல்தான் அவர்கள் நிலையும். இதைத்தான் "இருதலைக் கொள்ளி எறும்பு" என்பார்கள்.

...ஈ...

☞ 'ஈ' அடிச்சான் காப்பி

பரிட்சை ஹாலில், முன்னால் அமர்ந்திருக்கும் மாணவனைப் பார்த்து, பின்னால் அமர்ந்திருந்த மாணவன், ஒருவரி விடாமல் காப்பி அடித்துக் கொண்டிருந்தான். முன்னால் அமர்ந்திருந்த மாணவனின் விடைத்தாளில், ஒரு 'ஈ' வந்து அமர, அதை அவன் தன் கையால் அடித்தான். 'ஈ' இறந்துபோய், காலை விரித்து பேப்பரிலேயே ஒட்டிக் கொண்டது! அவன் ஈயை அடித்ததை பின்னால் இருந்த மாணவன் கவனிக்கவில்லை. அதுவும் ஒரு விடைதான் போலிருக்கிறது என்று, அந்த ஈயைப் போலவே இவன் தாளிலும் வரைந்து வைத்தான். விடை திருத்திய ஆசிரியர், நிஜ ஈயை அடித்த மாணவனை, இவன் பார்த்து காப்பி அடித்திருக்கிறான் என்பதைக் கண்டுபிடித்து விட்டாராம். காப்பி அடிப்பதிலும் ஒரு விவஸ்தை வேண்டுமல்லவா?

☞ ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை

ஈயத்தைவிட, தான் உயர்ந்த உலோகம் என்று நினைத்துக் கொண்ட பித்தளை, அதைப் பார்த்து சிரித்ததாம்! ''உன்னைவிட நான் விலையில் உயர்ந்தவன்! என்னைக் கொண்டுதான் பாத்திர, பண்டங்களை செய்கிறார்கள்!'' என்று பெருமைப் பட்டுக் கொண்டது! ஆனால் ஈயம் பூசாமல் பித்தளைப் பாத்திரத்தை யாரும் உபயோகிப்பதில்லை, ஈயம் இல்லாத பாத்திரத்தில் உணவு சமைத்தால் அது நஞ்சாகி விடும் என்பதை அந்தப் பித்தளை உணராமல் போயிற்று! இதைத்தான், தன்னிட முள்ள குறைகளை மறந்து, அடுத்தவர்களை கேலி செய்வது என்பது!

...உ...

☞ உப்புக் கல்லு பெறமாட்டான்.

இயற்கையாகக் கிடைக்கும் கடல் நீரை தேக்கி வைத்து, உப்புதயாரிக்கிறார்கள். விலை குறைவாக விற்கும் பண்டங்களில் உப்பும் ஒன்று! அந்த குறைந்த விலைக்குக் கிடைக்கும் ''உப்புக் கல்லுக்குகூட இவன் தகுதி இல்லாதவன்'' என்று, எதற்கும் உதவாத நபர்களைப் பார்த்து இப்படிச் சொல்லுவார்கள்.

☞ உத்தரவாதமில்லை

ஒருவருக்கோ, அல்லது ஒரு பொருளுக்கோ 'கியாரண்டி' கொடுக்க முடியுமா? என்று நம்பிக்கைக்காக சிலர் கேட்பதுண்டு. அதற்கு ஒருசிலர், ''அதுக்கு நான் உத்தரவாதம் கொடுக்கிறேன்'' என்றோ, அல்லது ''நான் உத்தரவாதம் இல்லை'' என்றோ சொல்லுவதுண்டு! அந்த ''உத்தரவாதம்'' என்ற சொல் எப்படி வந்தது? வீடுகள் பழுதடைந்து விழும் நிலை ஏற்பட்டுவிட்டால்,

அதை தாங்கிக்கொள்ள, மரத்தினால் கனமான மரக்கட்டை செய்து, வீட்டுக் கூரையை தாங்கிக் கொள்ளும்படி அமைத்திருப் பார்கள். அதற்கு ''உத்தரம்'' என்று பெயர். வீடு விழாது என்பதற்கு உத்தரம் உறுதியாக இருப்பதைப் போல, இதற்கு நான் உறுதி சொல்ல முடியாது! என்பதைத்தான் இப்படிச் சொல்கிறார்கள். 'உத்தரன்' என்றால் தாங்கும் சக்தி உடையவன் என்று பொருள்.

...ஊ...

☞ **ஊர் ரெண்டு பட்டால்,**
கூத்தாடிக்குக் கொண்டாட்டம்!

ஊர் திருவிழாக்களிலே கூத்து நடக்கும். கூத்தாடுபவர்களை அழைத்து, அதை நடத்துவார்கள். ஒன்றுபட்டுள்ள ஊருக்குள் ஏதாவது பிரச்சனை வந்துவிட்டால், ஊர் ரெண்டு பட்டு விடும்! அதனால் ஊர் மக்கள் இரண்டாகப் பிரிந்து, இரண்டு இடங்களில் கூத்து நடத்துவார்கள். கூத்தாடுபவர்களுக்கு இரண்டு வருமானம் கிடைக்கும். அப்படி ஒரே இடத்தில் கூத்து நடந்தாலும் ரெண்டு பட்ட கோஷ்டிகள் இரண்டு குழுவாக அமர்ந்து கொண்டு கூத்தாடுபவர்களுக்கு போட்டி போட்டுக்கொண்டு சன்மானம் வழங்குவார்கள். ஒருவர் 50 ரூபாய் என்றால், அடுத்தவர் 100 ரூபாய் என்று கொடுப்பார்! இது கூத்தாடிகளுக்குக் கொண்டாட்டம்தானே!

...எ...

☞ **''எம்டன்'' அந்த ஆளு!**

''சரியான எம்டனப்பா அந்த ஆளு! எதுலையும் சிக்கமாட்டான்! எல்லாத்திலையும் தப்பிச்சுக்குவான்'' என்று

சில தந்திரசாலிகளைப் பார்த்துச் சொல்வதுண்டு! எம்டன் என்றால் என்ன? 'எம்டன்' என்பது ஒரு ஜெர்மானியப் போர்க்கப்பல்! மின்னல் வேகத்தில் வந்து, குண்டுகளை வீசி, எதிரிகளைத் தாக்கிவிட்டு மறைந்து விடும் ஆற்றல் கொண்டது! அதிலிருந்து வெளிப்படும் கண் கூச்சும் வெளிச்சத்தில், அது வந்த வேகத்திலேயே தன் வேலையை முடித்துவிட்டு, எதிலும் சிக்காமல் திரும்பிவிடும்! அதனால்தான், யாரிடமும் மாட்டாமல் தந்திரமாக தப்பித்துக் கொள்ளும் ஆசாமிகளைப் பார்த்து, 'எம்டன்' என்று சொல்வார்கள். (உபரி செய்தி - இந்த எம்டன் கப்பல் தான் 1914-ல் முதலாம் உலகப்போரின்போது, சென்னையில் குண்டுகளை வீசித் தாக்கி இங்கிலாந்து கப்பலையும், எண்ணெய் டேங்குகளையும் நாசப்படுத்தி மறைந்தது!).

☞ **எறும்பும் தன் கையில் எண் சாண்.**

மனிதன் எவ்வளவு உயரமானவனாகவோ, அல்லது குள்ளமானவனாகவோ இருந்தாலும், அவரவர்கள் தன் கையால் அளக்கும்போது, எட்டு சாண் உயரம்தான் இருப்பார்கள். உங்கள் கைகளில் உள்ள விரல்களை விரித்து, உள்ளங்காலிலே இருந்து, உச்சித்தலைவரை அளந்து பாருங்கள். எட்டு சாண்தான் இருப்பீர்கள்! உருவத்திலே சிறிய உயிரினமான எறும்புகூட, அது தன் கையால் எட்டு சாண் இருக்கும்! அதற்குள், நான் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன் என்ற மனப்போக்கு எதற்கு? அவரவர்கள் தகுதிக்கேற்ப, அவரவர்கள் உயர்ந்தவர்கள் தான் என்பதை இந்தச் சொற்றொடர் மூலம் அறிந்து கொள்ளலாம். உயரம் எட்டு சாண்தான் என்பதற்கு, 'எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்!' என்ற பழமொழியும் உண்டு!

...ஏ...

☞ ஏழாம் பொருத்தம்.

கணவன், மனைவிக்குள் எப்போதும் சண்டையும், சச்சரவுமாய் இருந்து, ஒற்றுமை இல்லாமல் வாழ்ந்து வந்தால், அவர்களைப் பார்த்துச் சொல்லுவது... ''அவனுக்கும், அவளுக்கும் ஏழாம் பொருத்தம்பா!'' என்று. 'ஏழாம் பொருத்தம்' என்றால் என்ன? திருமணத்தின்போது, முக்கியமாக பத்து பொருத்தங்களைப் பார்த்துதான் திருமணம் செய்வார்கள். இதில் 7-ம் பொருத்தம் என்பது, மனைவி அல்லது கணவன் அமைவதைப் பற்றி சொல்லுவது! இதை 'களஸ்திர ஸ்தானம்' என்பார்கள். அதாவது, எப்படிப்பட்ட மனைவி, அல்லது கணவன் அவர்களுக்கு வந்து அமைய வேண்டும் என்று பார்க்கும் இடம் இதுதானாம்! இந்த ஏழாமிடம் பொருந்தாமல் அமைந்து விட்டால்தான் அவர்களுக்குள் சண்டையும், சச்சரவும் இருந்துகொண்டே இருக்கிறது என்பார்கள்.

☞ ஏழு பிறப்புகள்?

'ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் நீ செஞ்ச பாவம் தீராது'' என்று சபிப்பார்கள். என்ன அந்த ஏழு ஜென்மம்? இறப்பிற்கும் பின்னும் ஏழு பிறவிகள் உண்டு என்று நம்புகிறார்கள். அவை, 1. தேவர்கள் (அருள்பெற்று வானில் இருப்பவர்கள்); 2. மக்கள் (பூமியில் உள்ள மனிதர்கள்); 3. விலங்குகள் (மிருக இனங்கள்); 4. பறப்பன (வானில் பறப்பவைகள்); 5. ஊர்வன (நிலத்தில் ஊர்ந்து செல்பவைகள்); 6. நீர் வாழ்வன (நீரில் நீந்துபவைகள்); 7. தாவரங்கள் (செடி, கொடி, மரங்கள்) என்பவையாகும். இவை அவரவர்கள் செய்த பாவ, புண்ணியங்களுக்கேற்ப, அடுத்த ஜென்மத்தில் அமையுமாம்.

☞ **ஏறி மேஞ்சிடுவான்.**

"கொஞ்சம் ஏமாந்தா ஏறி மேஞ்சிடுவான்" என்று எதிராளியைப் பார்த்துச் சொல்வார்கள். தோட்டம், வயல்களில் வேலிச் சுவர் சரியில்லை என்றால், ஆடு, மாடுகள் தாண்டி வந்து பயிரை மேய்ந்து விடும். அதைப்போல, இவனிடம் முன்னெச்சரிக்கையாக இல்லையென்றால், வேலி ஏறி மேய்ந்து விடும் ஆடு, மாடுகளைப் போல் இவனும் ஏமாற்றி நுழைந்து விடுவான் என்று எச்சரிக்கையாகச் சொல்வதுண்டு.

...ஓ...

☞ **ஒத்து ஊதறான்.**

நாயனம் வாசிப்பவருக்கு அருகில் அமர்ந்து, அவர் வாசிப்பதற்கேற்ற சுருதியை குழலில் ஊதிக்கொண்டே இருப்பவனை 'ஒத்து ஊதுகிறவன்' என்று சொல்வார்கள். நாயனக்காரர் எந்த சுருதியில் வாசிக்கிறாரோ, அந்த சுருதியைக் காட்டிக் கொண்டிருப்பதுதான் இவன் வேலை. அவர் சுருதிக்கு இவன் வாசிப்பதைப் போல, ஒருவன் எதைப் பேசினாலும், அதற்கேற்றபடி, அவனோடு சேர்ந்து பேசுபவனை, 'ஒத்து ஊதறான்' என்பார்கள்.

...ஓ...

☞ **'ஓசி'யிலே வாழறவன்.**

ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த காலத்திலே, அரசு சார்ந்த துறைகளுக்குச் செய்தி ஏதேனும் தபாலில் அனுப்பினால்,

அதில் தபால்தலை ஒட்டப்பட்டிருக்காது. அரசுக்கு அரசே அனுப்பும் தபாலில், ஏன் தபால்தலையை வீணாக்க வேண்டும் என்று விட்டு விட்டார்கள். அதற்கு பதிலாக 'O.C.S' என்ற முத்திரை (Rubber–Stamp) அதில் குத்தப்பட்டிருக்கும். 'On combany service only' என்பதன் சுருக்கமே 'O.C.S' என்பது! செலவில்லாமல் அரசு தபால் அனுப்பியதைப் போலவே, செலவில்லாமல் காலத்தை ஓட்ட நினைக்கும் சில நபர்களைப் பார்த்து 'ஓ.சி' என்றே அழைக்க ஆரம்பித்தார்கள். அடுத்த வீட்டுக்கு வரும் தினசரி பேப்பரையும், நண்பனின் பாக்கெட்டிலே இருக்கும் சிகரெட்டையும், அலுவலகத்தில் பக்கத்தில் இருப்பவரின் டிபன் கேரியரையும் பங்கு போட்டுக் கொள்பவர்களை 'ஓசி' ஆள் என்றே அழைத்தார்கள்.

☞ **ஓடமும் வண்டியில் ஏறும்,**
வண்டியும் ஓடத்தில் ஏறும்.

ஓடம் பழுதாகி விட்டால், அதை வண்டியிலே ஏற்றி, பழுதுபார்க்க எடுத்துச் செல்வார்கள். வண்டி பழுது ஏற்பட்டால், அதை ஓடத்தில் ஏற்றி, அக்கரைக்குக் கொண்டு செல்வார்கள். சூழ்நிலை ஒன்றை எப்படி வேண்டுமானாலும் மாற்றும். ஒருவனை சுமந்து செல்லும் வாகனம் வழியிலே பழுதடைந்து விட்டால், அதன்மீது அமர்ந்து வந்தவனே அதை இழுத்துவர வேண்டியதிருக்கும். நம்மை சுமந்தவற்றையே ஒரு சந்தர்ப்பத்தில் நாம் சுமக்க வேண்டியது வரும். சுகத்தை அனுபவிப்பவன் எப்போதும் சுகவாசியல்ல! துயரத்தை அனுபவித்துக் கொண்டிருப் பவன், அதை எப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டியவனல்ல! என்பதை இது குறிக்கிறது.

...க...

☞ 'கம்'முன்னு இருந்தா காரியம் நடக்கும்.

''கம்முன்னு இருந்தா காரியம் எப்படி நடக்கும்? அது சோம்பேறிகளின் செயல் அல்லவா?'' என்று இதைச் சொன்னவரிடம் கேட்டபோது, ''நீங்கள் அப்படி பொருள் கொள்ளாதீர்கள்'' 'கம்' என்றால், மந்திரங்களில் மூலமந்திரமாகும். எனவே மூலக்கடவுளாகிய கணபதியைப் பற்றிக் கொள்ளுங்கள். காரியம் நடக்கும்!'' என்றார் அவர்.

☞ கட்டிக் கரும்பைக் கடித்தால்,
சுட்டிப் பிள்ளை உருவாகும்.

கரும்பைக் கடித்துத் தின்னும்போது அதன் சாற்றை வாய் முழுவதும் சுவைத்துத் தின்கிறோம். கரும்பு, தின்பதற்கு மட்டும் சுவை என்று நினைக்காதீர்! அதில் ஆண்களுக்கு ஆண்மை தரும் மருத்துவ குணமும் இருக்கிறது! அதனால்தான் 'கரும்புத் தின்னக் கூலியா?'' என்று கேட்டார்கள். ஆண்களுக்கு தாம்பத்திய சுகம் தரும் குணம் கரும்பில் இருப்பதால், அழகான வாரிசுகளைப் பெற அது உதவுகிறது! இதுதான் மன்மதன் கையில் கரும்பு வில் வைத்திருப்பதன் இரகசியம் போலிருக்கிறது!

☞ கஜகர்ணம், கோகர்ணம் போட்டாலும் முடியாது!

'கஜம்' என்றால் யானை, 'கோ' என்றால் பசு. இரண்டிற்கும் பெரிய உடம்பு! அதனால் கர்ணம் போடுவது என்பது இயலாது! ஒருவன் தன் காரியத்தைச் சாதிக்க, அதையும், இதையும் செய்து ஆட்டம் போட்டுப் பார்ப்பான். அவனிடம் ''நீ கஜகர்ணம், கோகர்ணம் போட்டாலும் நடக்காது!'' என்று சொல்லுவார்கள். யானை ஓரிடத்திலே நிலையாக நிற்காது! கால்களை மாற்றி

மாற்றி வைத்து, காதையும், தும்பிக்கையையும் ஆட்டிக் கொண்டே நிற்கும்! அது எதையோ சாதிப்பதற்காக அசைவது போல் தெரியும். ஆனால் பலன் ஏதும் இருக்காது! அதைப்போல, பலன் இல்லாத ஒன்றுக்காக குதி ஆட்டம் போடுபவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னார்கள்.

☞ கழுதை வயசாச்சு, அறிவில்லை!

கழுதையின் ஆயுட்காலம் சராசரி 12 வருடம் என்பார்கள். அது ஏமாளியாகவும், அறிவு குறைவாகவும் உள்ள விலங்கு! தன் முதுகிலே எத்தனை சுமையை ஏற்றினாலும் சுமந்து சென்று இறக்கிவிட்டு, குட்டிச் சுவருக்கருகில் போய் அசையாது நின்று கொள்ளும்! பொதி சுமப்பதைத் தவிர, தன்னைத் தானாகவே மேய விடும் எஜமானைப் பற்றி அது கண்டுகொள்வ தில்லை! அதுதான் 'கழுதை புத்தி' என்பார்கள்! எதையும் தானாக சிந்தித்து அறிய முடியாத கழுதையைப் போல, 12 வயதாகியும் அறிவில்லாமல் நடந்து கொள்பவர்களைப் பார்த்து, ''ஒரு கழுதை வயசாச்சு! இன்னும் அறிவு வளரலே உனக்கு!'' என்று வசை பாடுவார்கள். (''என்னைப் பார், அதிர்ஷ்டம் வரும்!'' என்று கேவலமாகப் பேசப்படும் கழுதையின் படத்தைப் போட்டு, வீட்டின் முன் தொங்க விட்டிருப்போருக்கு கழுதைகள் நன்றி சொல்லட்டும்!).

☞ கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே!

ஒருவர் செய்யும் வியாபாரத்திலோ, தொழிலிலோ மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டு, நொடிந்து போய் கவலைப் பட்டுக் கொண்டிருந்தால், அவரைப் பார்த்து, ''அதற்காக கன்னத்தில் கை வைக்க வேண்டாம்'' என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம்! கன்னத்தில் கையூன்றி அமர்ந்திருக்காதே,

என்று இதற்குப் பொருளல்ல! 'கன்னம்' என்றால், தமிழில் 'திருட்டு' என்று ஒரு அர்த்தம் உண்டு! எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும், உன் நேர்மையை கைவிடாதே! கப்பலே. கவிழ்ந்தாலும் தவறான வழியில் போய்விடாதே! நம்பிக்கை யோடு சூழ்நிலையை எதிர்கொள்! இழந்ததைப் பெற்றுவிடலாம்! என்று அறிவுரையாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

☞ **கஸ்மாலம்.**

சமஸ்கிருதத்தில் மனநோயை 'கச்மலம்' என்று சொல்வார்கள். இதுவே, கஸ்மாலம் என்றாகிவிட்டது. ஒருவனைத் திட்டுவதற்கு இந்த சொல்லைப் பயன்படுத்து கிறார்கள். பெரும்பாலும் சென்னைவாசிகள் 'கஸ்மாலம்', 'கஸ்மாலம்' என்று, இந்தச் சொல்லை அதிகமாக உபயோகிப் பார்கள். இதற்கு மோசமான மனசைக் கொண்டிருப்பவன் என்று பொருள்!

☞ **கயிறு திரிக்கிறான்.**

பலமில்லாத கயிறுகளை ஒன்றுசேர்த்து, ஒரு வலுவான கயிறாகத் திரிப்பார்கள். அது முறுக்கேறி கனமான கயிராகி விடும்! அதுபோல, ஒன்றுமில்லாத ஒன்றை, ஒன்றுக்குப் பத்தாக்கி, இல்லாததும், பொல்லாததையும் சேர்த்து அதிகப் படுத்தி சொல்லுவதைத்தான் ''கயிறு திரிக்கிறான்'' என்று சொல்வார்கள். இவர்கள், ஈறைப் பேனாக்கி, பேனை பெருமாளாக்கிச் சொல்லுபவர்கள்.

☞ **கம்பி நீட்டிட்டான்.**

இரும்பைப் பழுக்கக் காய்ச்சி, சம்மட்டியால் அடிக்க, அடிக்க அது கொஞ்சம் கொஞ்சமாக நீண்டுகொண்டே போகும்! அது நீளுவது சரியாக கண்ணுக்குத் தெரியாது. அதேபோல்,

சிறிது சிறிதாக நகர்ந்து, யாருக்கும் தெரியாமல் வெளியேறி விட்டவனை ''கம்பி நீட்டிட்டான்'' என்று சொல்லுவதுண்டு!

☞ கல்லுளி மங்கன்.

உளியைக் கொண்டு கல்லை உடைத்தாலும் கல் அசையாமல் இருக்கிறது! அதைப்போல, சிலரை அடித்தாலும், திட்டினாலும் அசைவில்லாமல் நின்றிருப்பார்கள்! இப்படிப் பட்ட இறுக்கமான மனசு உள்ளவர்களை ''கல்லுளி மங்கன்'' என்று சொல்வதுண்டு! அதேபோல், இரத்தம் சொட்டச் சொட்ட உளியைப் போன்ற கூர்மையான கல்லைக் கொண்டும், சவுக்கால் தன்னை அடித்துக் காயப்படுத்திக்கொண்டும், பிச்சை கேட்டு வருபவர்கள் ஒருவகை உண்டு! இவர்களையும் 'கல்லுளி மங்கன்' என்பார்கள்.

☞ களவும் கற்று மற.

''திருட்டையும் தெரிந்துகொள்! ஏனென்றால், திருடுபவனிடம் நீ ஏமாந்து விடாமல் இருக்க அது வழி முறையைக் கற்றுக்கொடுக்கும். அதை நீ செய்ய வேண்டும் என்பதை மறந்து விடு!'' என்ற இதற்கு விளக்கம் சொல்வார்கள்! ஆனால், திருக்குறளார் வி. முனுசாமி அவர்கள் இதற்குத் தரும் விளக்கத்தைப் பாருங்கள்! தமிழில் 'களவு' என்பது காதல்! அகப்பொருளில் 'களவியல்', 'கற்பியல்' என இரண்டு சொல் உண்டு! கல்யாணமாகாத வரை உள்ள நிலை களவியல்! காதலிப்பது தவறல்ல! கல்யாணம் ஆனபிறகு உள்ள நிலை கற்பியல்! கல்யாணத்திற்கு முன்பு களவும் (காதலும்) செய்து, கல்யாணம் ஆனபிறகு அதை மறந்துவிட வேண்டும் என்று விளக்குகிறார். அதாவது, நீ கல்யாணத்திற்குப் பிறகு, வேறொருவர் மேல் காதல் கொள்வதை மறந்துவிடு!' என்பதுதான் இதன் விளக்கம்!

...கா...

☞ காந்தி கணக்கு!

வெள்ளையனை எதிர்த்து மகாத்மா காந்தி நடத்திய உப்பு சத்தியாக்கிரக போராட்டத்தின்போது, பல தேசத் தொண்டர்கள் அதில் கலந்துகொண்டு சென்றனர். அவர்களுக்கு வழியிலுள்ள கடைக்காரர்கள் உணவு, மற்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்கினார்கள். அதற்காக காசு எதுவும் அவர்கள் பெறவில்லை. தேசநலனுக்காக பாடுபடும் காந்தியின் வழியில் நடந்து வரும் தியாகிகளிடமிருந்து பணம் எதுவும் பெறக் கூடாது! என்று நினைத்தார்கள். காந்தியின் பெயரால் அவர்கள் இதை இலவசமாகச் செய்தார்கள்! இதுவே நாளடைவில், ஒருவன் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்காமல், இழுத் தடித்தால், ''அது இலவசமாகக் கொடுத்த காந்தி கணக்குத்தான்'' திரும்ப வராது! என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

☞ காது குத்தி இருக்கு!

குழந்தைகளுக்கு காது குத்துவது என்பதை ஐதீகமாகக் கொண்டுள்ளனர். காது குத்தும்போது ஏறத்தாழ குழந்தைகளை ஏமாற்றித்தான் குத்துகிறார்கள். அதை மடியில் வைத்து, பேச்சைக் கொடுத்து, அதன் வாயில் இனிப்பைத் திணித்து, கையில் மறைத்து வைத்துள்ள ஊசியால் காதை குத்துவார்கள். அதுபோல், தன்னை ஏமாற்று வார்த்தைகளால் பொய் சொல்லி குழந்தைகளை ஏமாற்றியதைப் போல் ஏமாற்ற வேண்டாம் ''எனக்கு ஏற்கனவே காது குத்தியாச்சு! நீ இப்ப குத்தாதே! என்று சொல்வதுதான் இது!

☞ காக்கா பிடிக்கிறான.

ஒருவரிடம், பணிந்து, நெளிந்து, அவரைப் புகழ்ந்து பேசி, தன் காரியத்தைச் சாதிக்க நினைப்பவனைப் பார்த்து, ''காக்கா பிடிக்கிறான்'' என்று சொல்வதுண்டு! அதாவது, காரியமாக கால், கையைப் பிடிக்கிறான் என்பது இதன் பொருள்! கால், கை என்பதுதான் 'காக்கை' என்றாகி, பிறகு, 'காக்கா' என்னும் சொல்லாகி விட்டது! இதேபோல்தான் காக்கா வலிப்பு என்பதும்! கால், கையை இழுத்துக் கொள்வதால், அந்த நோய் ''காக்கா வலிப்பு'' என்றாயிற்று!

☞ கானல் நீர்!

''பாவம் அவன் நெனச்சதெல்லாம் கானல் நீர்போல ஆயிடுச்சு!'' என்று எதையோ எதிர்பார்த்து, அது கிடைக்காமல் ஏமாந்து போனவனைப் பார்த்துச் சொல்லுவார்கள். ''கானல் நீர்'' என்றால் என்ன? அது ஒரு பொய்த் தோற்றம்! இருப்பதைப் போல் தோன்றும், அருகில் சென்று பார்த்தால் எதுவும் இருக்காது! அது எப்படித் தோன்றுகிறது என்றால், கோடையின் கடுமையான வெயிலின்போது, வெப்பக் காற்று தரையில் வந்து படும். அப்போது, மணற்பரப்பிலோ, தார்சாலையிலோ வெப்பக் காற்று நீரலையாய் தோன்றும்! அது தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு குட்டையில் நீர் நிறைந்திருப்பதைப் போல் தெரியும்! அருகில் சென்று பார்த்தால், அது வெறும் மணற்பரப்பாகவோ, தரையாகவோதான் இருக்கும்! இதை பாலவன மணல்பரப்பிலும், சிலநேரங்களில் தார்ச்சாலை களிலும் காணலாம். இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து ஏமாறுவதுதான் ''கானல் நீர்!''.

☞ **காஞ்சிபுரம் போனா காலாட்டித் திங்களாம்.**

வேலை இல்லாமல் அலைபவர்களைப் பார்த்து, ''காஞ்சிபுரம் போனால் காலாட்டித் திங்கலாம்'' என்பார்கள். ஆகா! அப்படியொரு ஆனந்த வாழ்க்கை இருக்கா? என்று காஞ்சிபுரம் கிளம்ப எண்ணிவிட வேண்டாம். எங்கு சென்றாலும் கஷ்டப்பட்டு உழைத்தால்தான் வாழ்க்கை! காஞ்சிபுரத்திலே பட்டுத்தறிகள் ஏராளம்! பட்டு நெய்யும்போது, தறிக்குழிக்குள் மிதியடி போன்ற இரண்டு மரக்கட்டைகள் இருக்கும். அதில் இரண்டு கால்களை பதித்து மாறி மாறி மிதிக்க வேண்டும். அப்பொழுதுதான், ஊடை நூலை உள்வாங்க, பாகு நூல் தன் வாயைத் திறக்கும்! இப்படி காலை ஆட்டிக்கொண்டே நெய்தால்தான் அழகான பட்டுப்புடவை கிடைக்கும்! அதற்குத் தகுந்த கூலியும் கிடைக்கும்! வீட்டுக்கு வீடு தறிகள் இருப்பதால், அங்கே, கால்களை ஆட்டி நெசவுத்தொழில் செய்து நிச்சயம் பிழைக்கலாம்!

...கி..

☞ **கிணற்றுத் தவளை.**

"இவன் சுத்த கிணற்றுத் தவளைப்பா...!" என்று ஒருவரைப் பார்த்துச் சொன்னால், அவர் வெளிஉலகம் தெரியாதவர் என்று பொருள்! கிணற்றுக்குள்ளேயே பிறந்து, வளர்ந்த தவளை, உலகமே இதுதான் என்று எண்ணிக் கொண்டிருக்கும்! இதற்கு ஒரு கதை உண்டு! கடலில் வாழும் தவளை ஒன்று கிணற்றுக்குள் தவறி விழுந்து விட்டது! அதைப்பார்த்து கிணற்றுத் தவளை கேட்டது, ''நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்று.

கடல் தவளை பதில் சொல்லிற்று, "கடலிலிருந்து...!" என்று.

''கடலா...? அது இவ்வளவு பெரிதாக இருக்குமா?'' என்று தன் காலை நீட்டிக் காண்பித்தது கிணற்றுத் தவளை.

''ஊஹற்ம். அது மிகப் பெரியது!'' என்றது கடல் தவளை.

''இந்தக் கிணற்றில் பாதி இருக்குமா...?'' என்று கேட்டது, கிணற்றுத் தவளை.

''இதைவிட பல கோடி அளவு பெரியது?'' என்றது கடல் தவளை.

கிணற்றுத் தவளைக்கு கோபம் வந்துவிட்டது! கடல் தவளை தன்னை ஏமாற்றுகிறது என்று நினைத்தது. ''நீ பொய் சொல்கிறாய்! நீ இங்கிருந்து போய்விடு!'' என்று கடல் தவளையை விரட்டியடித்தது! அது வெளிஉலகத்தைப் பார்க்காததால், கிணற்றை விட பெரியது ஒன்றுமில்லை என்று நினைத்தது. இந்தக் கதையைச் சொன்னவர் விவேகானந்தர்.

...கு...

☞ குப்பை கொட்டியாச்சு!

நீண்ட நாட்களாக ஒரு துறையில் வேலை பார்த்தவர் களிடம், அந்த துறையைப் பற்றி யாராவது விமர்சனம் செய்தால், ''எனக்குத் தெரியாதா? நான் எத்தனை வருடம் அங்கே குப்பை கொட்டி இருக்கிறேன்'' என்று சொல்வார். அதாவது, எந்தப் பொருளும் நீண்ட நாட்கள் கையாண்டால், அது பழையதாகி, கடைசியில் குப்பைக்குத்தான் போகும். அப்படி புதிய பொருட்கள் பழையதாகி குப்பைக்குப் போகும் வரை, நான் அங்கே வேலை செய்திருக்கிறேன் என்பதைத்தான் அவர் இப்படிச் சொல்லுகிறார்.

☞ குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்.

'மோதகக் கையால்' என்பதுதான், இப்படி 'மோதிரக் கையால்' என்று ஆகிவிட்டது என்கிறார்கள் ஐதீகவாதிகள்! 'மோதகம்' என்றால் கொழுக்கட்டை! விநாயகர் மோதகம் (கொழுக்கட்டை) ஏந்திய கையை உடையவர்! ''குட்டுப் பட்டாலும் மோதகம் ஏந்திய விநாயகர் கையில் குட்டுப்பட வேண்டும்'' என்பதுதான் இதன் பொருள் என்கிறார்கள். அவரை வணங்கி, இரண்டு கைகளால் தலையில் குட்டிக் கொண்டால், மங்கியுள்ள அறிவு தூண்டப்பட்டு, அவர்களிடம் உள்ள அஞ்ஞானம் அகலும் என்று சொல்கிறார்கள். ஆகையால், 'மோதகக் கையால் குட்டுப்பட வேண்டும் என்பதுதான் சரி என்கிறார்கள். ஆனால், மோதிரக் கையால் (மோதிரம் அணிந்த வசதியானவர்கள் கையினால்) குட்டுப்படுவது பெருமை என்று நினைப்பவர்களும் உண்டு! ''குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படணும்!'' என்று சொல்வார்கள். இது எப்படி இருக்கிறது என்றால்...? சந்தையில் ஒரு பெண்ணை, ''அடியே இங்கே வாடி'' என்று ஊர்த் தலைவர் அவள் பெயரைச் சொல்லி அழைத்தார்! அது அவளுக்கு நிலைகொள்ளாத பெருமையாய் போயிற்று! இதை எல்லோரிடமும் சொல்லி, ''சந்தெக் கூட்டத்திலே என்னே ஊர் தலைவரு அடியே இங்கே வாடீன்னு கூப்பிட்டாரு!'' என்று பெருமைப்பட்டுக் கொண்டாள்! அவளுக்கு 'அடியே' என்றதும், 'வாடி' என்றதும் பற்றி கூட கவலை இல்லை. அத்தனை பேர் முன்னாடி ஊர் பெரிய மனிதர் தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததைத்தான் பெருமையாக நினைத்துக் கொண்டாள்.

☞ **குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பு!**

கோடாலிக்காம்பு மரத்தினால் செய்யப்பட்டது! அந்த மரக்காம்பே தன் இனங்களான மரங்களை வெட்டி வீழ்த்த உதவுகிறது! கோடாலிக் காம்பு, அதன் இனத்தையே அழிக்க உதவுவதைப் போல், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருக் கொருவர் அடித்துக்கொண்டும், சண்டையிட்டும், காட்டிக் கொடுத்தும் தங்கள் இனத்தையே அழித்துக் கொள்வதைத்தான் இப்படிச் சொல்லுவார்கள்.

...கூ...

☞ **கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.**

பணமும் பத்தா இருக்கணும், பொண்ணும் முத்தா இருக்கணும் என்று எல்லாவற்றிற்கும் ஆசைப்பட்டு அலைபவர்கள் உண்டு! கூழ் குடிக்க ஆசைப்பட்டால், மீசை அதற்குத் தடையாக இருக்கும். கூழை சுவைத்து குடிக்கும்போது மீசையில் ஒட்டிக் கொள்ளும். மீசையையும் வைத்துக்கொண்டு கூழையும் குடிக்க விரும்புபவர்கள் அதன் சுவையை ருசிக்க முடியாது. ஏதேனும் ஒன்றை விட்டுக்கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பதற்காக இப்படிச் சொன்னார்கள்.

...கெ...

☞ **கெண்டு கிடாரம்.**

''இங்கே கெண்டு கிடாரமா இருக்கு!'' என்று ஒன்று மில்லாததை சுட்டிக்காட்ட சிலர் இப்படிச் சொல்லுவார்கள்.

அது என்ன கெண்டு கிடாரம்? அபூர்வமான பொருட் களைத்தான் 'கெண்டு கிடாரம்' என்று சொல்லுவார்கள். கிடாரம் என்றால் புதையல்! புதையலில் கிடைக்கும் சில அபூர்வமான பொருட்களைப்போல, சில அரிய பொருட் களைத்தான் ''கெண்டு கிடாரம்'' என்று சொல்வது.

...கொ...

☞ கொன்றால் பாவம் தின்றால் போச்சு.

வாயில்லாத ஜீவன்களைக் கொன்று, அதன் இறைச்சியைத் தின்றுவிட்டால் அதைக் கொன்ற பாவம் போய்விடும் என்று சொல்பவர்கள் உண்டு! கொன்றதே பாவம்! அதைத் தின்பதால் எப்படிப் போகும்? என்கிறார் கிருபானந்த வாரியார். அதற்கு அவர் தரும் விளக்கம். கொன்றவர்கள் எப்படியும் நரகத்துக் குத்தான் போவார்கள். அங்கே அவர்களுக்குத் தண்டனையாக, அவர்கள் உயிர்களைக் கொன்று, தின்று வளர்ந்த அவர்கள் உடலையே வெட்டி அவர்களைத் திங்கச் செய்வார்கள் எம கிங்கரர்கள். உயிர்களைத் தின்ற பாவத்தால் வளர்ந்த உன் உடலை நீயே தின்றால்தான் உன் பாவம் நீங்கும் என்று அவர்களை சாப்பிட வைப்பார்களாம் எம தூதர்கள்.

...ச...

☞ சல்லீசு

அந்தக் காலத்தில் ஒரு ரூபாயுக்கு பதினாறு அணா என்றும், ஒரு அணாவுக்கு பனிரெண்டு சல்லிக் காசுகள் என்றும் கணக்கு வைத்திருந்தார்கள். நாணயங்களில் சல்லிக்காசுதான்

மிகவும் குறைந்த மதிப்புள்ளது! ஒரு பொருள் சல்லிக்காசால் வாங்க முடிந்தால், அதை 'சல்லீசு' என்றார்கள். மிக குறைந்த விலை! மலிவானது! என்பதை 'சல்லீசு' என்றார்கள். இப்போதும்கூட ஒரு பொருள் குறைந்த விலைக்குக் கிடைத்தால், ரொம்ப 'சலீசா' விக்குது என்பார்கள்.

☞ சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.

புத்திசாலித்தனமாக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அதற்கு மூளை வேலை செய்ய வேண்டும். அது இல்லாதவனிடம் அதை எப்படி எதிர்பார்க்க முடியும்? ''சட்டியிலே இருந்தால் தானே அகப்பையில் வரும்'' என்று சொல்லுவார்கள். கையில் இல்லாதபோது எப்படி அடுத்தவனுக்குக் கொடுக்க முடியும்? என்ற நிலையிலும் இதைச் சொல்வார்கள். ஆனால், இந்தச் சொற்றொடரை ஐதீகர்கள் வேறுவிதமாகச் சொல்கிறார்கள். ''சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்பதுதான் இப்படி மாறியது என்கிறார்கள். அதாவது விரதங்களில், கந்த சஷ்டி விரதம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாம்! அதனால், 'சஷ்டியில்' விரதம் இருந்தால், 'அக பையில்' என்ற 'கர்ப்பப் பையில்' குழந்தை உண்டாகும் என்பது இதன் பொருள் என்கிறார்கள்.

...சா...

☞ சாது மிரண்டால் காடு கொள்ளாது!

சாதுவாக இருப்பவனுக்கு கோபம் வந்தால், காட்டையே அழித்து விடுவான் என்பதற்காக இதனைச் சொல்வார்கள். ஆனால், இதற்கு வேறு ஒரு பொருளும் இருக்கிறது! சாதுக்கள் காடு, வனாந்திரங்களில், தனிமையில் சென்று, தவம் செய்ய

வேண்டியவர்கள். அவர்களே காட்டைக் கண்டு பயந்து, மிரண்டுவிட்டால் காடு அவர்களை எப்படி ஏற்றுக்கொள்ளும்? என்றும் சொல்லுவார்கள். சாது பயந்தால் காடு அவர்களை ஏற்றுக்கொள்ளாது என்பார்கள்.

...சி...

☞ சிதம்பர ரகசியம்.

"அது என்ன விஷயம் சொல்லப்பா...?" என்று யாராவது கேட்டால், ஒரு சிலர், அது ரகசியம், சொல்லக் கூடாது என்பார்கள். "பெரிய சிதம்பர ரகசியம். சொல்ல மாட்டாராம்" என்று கோபிப்பார் கேட்டவர். அது என்ன சிதம்பர ரகசியம்? சிதம்பரம் கோவிலில் 'சித்சபை' அருகே ஒரு சிறு வாயில் இருக்கும். அதில் ஒரு திரை தொங்கிக் கொண்டிருக்கும். பூசையின்போது அந்தத் திரையை விலக்கி, ஆரத்தி காட்டு வார்கள்! உள்ளே உருவம் எதுவும் இருக்காது! அது வெறும் அறையாகத்தான் இருக்கும்! அங்கே உருவம் இல்லாததற்குக் காரணம், கடவுள் ஆகாசம், அல்லது வெளி வடிவமாக இருக்கிறார் என்பதைக் குறிக்கத்தான் இப்படி வெறும் அறையை வைத்திருக்கிறார்கள். இதைத்தான் 'சிதம்பர ரகசியம்' என்பார்கள். சிதம்பர ரகசியம் என்றால் ஒன்றுமில்லை என்றுதான் பொருள்.

☞ சிவபூசையில் கரடி நுழைந்ததுபோல்...

கரடி என்பது இங்கே மிருகமல்ல! அது ஒரு வகையான வாத்தியம். சிவனுக்கு மிகப் பிடித்தமான வாத்தியமாம் அது! சிவன் பூசையின்போது, அந்தக் கரடி வாத்தியத்தை வாசிப்

பார்கள். அது ஒலித்துக்கொண்டே இருக்கும்! பூசை செய்யும் நேரத்திலும், மந்திரம் சொல்லும்போதும், அது தேவை யில்லாமல் ஒலித்துக்கொண்டேதான் இருக்கும்! அதேபோல், சில முக்கிய வேலையின்போது, அதற்கு சம்மந்தம் இல்லாதவர்கள் யாராவது வந்து, இடையூறாக இருந்தால், ''வந்திட்டாம்பா சிவபூசையில் கரடி மாதிரி'' என்று முணுமுணுப்பார்கள்.

☞ சிட்டா பறந்திட்டான்.

சிட்டுக்குருவி ஒரு சின்ன அசைவு ஏற்பட்டாலும், திரும்பிப் பார்ப்பதற்குள் 'சர்'ரென்று பறந்துவிடும்! அருகில் இருந்தவனை திடீரென்று காணாவிட்டால், ''அவன் சிட்டா பறந்திட்டாம்பா!'' என்பார்கள்.

☞ சிங்கம்டா நான்!

''நான் சிங்கம்'' என்று மார் தட்டும் சில ஆண்களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், ஆண் சிங்கம் ஒரு சோம்பேறி! அது வேட்டைக்குப் போவதில்லை! பெண் சிங்கம்தான் வேட்டையாடும். ஆண் சிங்கம் உறுமலோடு சரி! பெண் சிங்கம் வேட்டையாடி வந்ததை முதலில் அதுதான் திண்ணும். இனிமேல் யாராவது நான் 'ஆம்பளே சிங்கம்டா' என்று சொன்னால் சோம்பேறிச் சிங்கமா? என்று கேளுங்கள்.

☞ சிவன் சொத்து குலநாசம்.

சித்தமார்க்கம் சிவன் அருளியது என்பார்கள். ஒருவர் சித்தராக ஆகவேண்டுமென்றால், அந்த மார்க்கத்தின் சில விதிமுறைகளைக் கையாள வேண்டும். முக்கியமாக

பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். விந்தை அடக்கி ஆளவேண்டும். அவன் விந்தை அடக்குவதால், அவனுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் போய்விடுகிறது! அதனால், அவன் வம்சம் அவனோடு முடிந்துவிடுகிறது! இதுதான் 'சிவன் சொத்து குலநாசம்' என்பார்கள்.

...ஸ்ரீ...

☞ ஸ்ரீரங்கத்தில் உலக்கை கொடுத்ததைப் போல...

ஸ்ரீரங்கம் கோவிலிலே உரலும், உலக்கையும் வைத்திருப் பார்கள். அதன் பக்கத்திலே நெல் இருக்கும். வேண்டுதல் உள்ள பக்தர்கள், உரலில் நெல்லைப் போட்டு, உலக்கையால் இடைவிடாமல் குத்திக்கொண்டே இருப்பார்கள்! அவர்களுக்கு சலிப்பு ஏற்பட்டுவிடும்! ஆனாலும், அடுத்த பக்தர்கள் வந்து உலக்கையை வாங்கும்வரை, அவர்கள் குத்திக்கொண்டே இருக்க வேண்டும்! அதற்குள் அவர்கள் கை ஓய்ந்துவிடும்! அடுத்தவர்கள் யாராவது வரமாட்டார்களா? என்று எதிர் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். வேண்டுதல் உள்ள பக்தர்கள் வேறு யாராவது வந்துவிட்டால், ''அப்பாடா'' என்று அவர்கள் கையில் உலக்கையைக் கொடுத்துவிட்டு, நழுவி விடுவார்கள்! இதேபோல்தான், ''இதெ கொஞ்சம் பிடிக்கறீங்களா, பக்கத்திலே போயிட்டு வந்திடறேன்'' என்று பாரத்தைக் கையில் கொடுத்து விட்டுச் செல்லுபவர்களும், ''இதைக் கொஞ்சம் பாத்துக் கறீங்களா? இப்ப வந்திடறேன்'' என்று ஒரு பொருளை ஒப்படைத்து விட்டுச் செல்பவர்களும் உண்டு! அவர்கள் சீக்கிரம் திரும்பாவிட்டால், காத்திருப்பவருக்கு ஸ்ரீரங்கத்தில் உலக்கைக் கொடுத்த கதைதான்.

...சே...

☞ **சேலை கட்டிய மாதரை நம்பாதே!**

பெண்களை இழிவாக்கும் சொல்லாக இந்த சொற்றொடர் அமைந்துள்ளது! அது தவறு! சேலை காட்டிய 'மாந்தரை' நம்பாதே! என்று சொல்வதுதான் சரி! ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாக சொல்லப்பட்டதுதான் இது! இதன் சரியான பொருள்...? ''சேல் அகட்டிய மாந்தரை நம்பாதே!'' என்பதுதான், சேல் என்றால் விழிகள்! அகட்டிய என்பது அசைத்துப் பார்ப்பது! கண்களைஅங்கும், இங்கும் அசைத்து, நோட்டம் விடுபவர்களை நம்பக்கூடாது என்று ஆண், பெண் அனைவருக்கும் பொதுவாக சொல்லப்பட்டதுதான் இது!

...சொ...

☞ **சொடக்குப் போட்டுக் கூப்பிடு!**

''இந்தக் காரியத்தை நான் செய்யலேன்னா, என்னை சொடக்குப் போட்டுக் கூப்பிடு!'' என்று சவால் விட்டுச் செல்வார்கள்! சொடக்குப் போட்டு கூப்பிடுவதிலே என்ன கேவலம் என்றால்...? நாய்களை இரு விரல்களால் சொடக்குப் போட்டு, 'உச்சு...' 'உச்சு..' என்று சத்தம் கொடுத்துக் கூப்பிடுவார்கள்! அதைப்போலே, ''இந்தக் காரியத்தை நான் செய்து முடிக்கவில்லை என்றால், என்னை நாயை கூப்பிடு வதைப் போலே சொடக்குப் போட்டுக் கூப்பிடு!'' என்று அடுத்தவனைப் பார்த்து சவால் விடுவதுதான் இது!

...சோ...

☞ **சோழியன் குடுமி சும்மா ஆடாது.**

தனக்குப் பயன் கிடைக்கும் என்றால், எப்படி வேண்டு மானாலும் செய்வார்கள் சிலர். அவர்களைப் பார்த்து, அவன் ஒண்ணும் சும்மா செய்யலே, அதிலே அவனுக்கொரு பலன் இருக்கு, ''சோழியன் குடுமி சும்மா ஆடாது'' என்று சொல்வார்கள். சோழியன் என்றால் வியாபாரி. வியாபாரம் செய்யும் கடையிலே, தலைக்கு மேல் உத்தரத்திலே ஒரு நீளமான கயிற்றைக் கட்டி, அதன் மறுநுனியை தன் குடுமியோடு இணைத்துக் கட்டிக்கொண்டு, சோழியன் அமர்ந்திருப்பான். இது எதற்கென்றால், வியாபாரம் இல்லாத போது, கண்ணயர்ந்து தூங்கிவிட்டால், தூக்கத்தில் தலை தானாக கவிழும் இல்லையா? அப்போது, குடுமியில் கட்டி இருக்கும் கயிறு இழுக்க, குடுமி தானாக ஆடி, அவிழ்ந்து சோழியனை விழிப்படையச் செய்துவிடும்! அவன் விழித்துக் கொண்டு, கடையில் திருட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வதற் குத்தான். இதற்கு வேறொரு விளக்கத்தையும் சொல்லுகிறார் ஆன்மிக சொற்பொழிவாளர் சுகி சிவம் அவர்கள்.

சோளியன் என்ற வியாபாரி சந்தைக்குச் சென்று பொருள்களை வாங்கிக் கூடையில் போட்டான். அதை தலையிலே சுமந்து செல்ல எண்ணினான். அது கனமாக இருந்தது! அவனிடம் சும்மாடு (பாரத்தை சுமந்து செல்ல தலைக்கு மேல் துணியை சுருட்டி வைத்துக்கொள்வது) இல்லை. தன் குடுமியையே சும்மாடுபோல் சுருட்டி, அதன் மேல் கூடையை வைத்தான். அது நழுவி, நழுவி அவிழ்ந்து கொண்டது. குடுமி தலையிலே சும்மாடு போல் நிற்காததால்

'சோழியன் குடுமி சும்மாடாகாது' என்று வந்ததுதான்'' 'சோழியன் குடுமி சும்மா ஆடாது!' என்றாயிற்று! என்பார்.

...த...

☞ தர்ம சங்கடமா இருக்கு!

தனக்கு விருப்பமில்லாத ஒரு காரியத்தை செய்தே ஆக வேண்டும் என்ற நிலை ஒருவருக்கு ஏற்பட்டால், அதை 'தர்ம சங்கடம்' என்று சொல்வார்கள். ராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு, பரதனுக்குப் பட்டம் சூட்டச் சொல்லி, கைகேயி தசரதனிடம், எப்போதோ கொடுத்திருந்த இரண்டு வரங்களைக் கேட்கிறாள். தசரதனோ, ராமனை விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை என்றாலும், கைகேயிக்கு கொடுத்திருந்த வாக்குச் சத்தியத்தையும் மீற முடியவில்லை! அந்த வாக்கு தர்மத்தைக் காப்பாற்றியே தீரவேண்டும். இது தசரதனுக்குத் தர்ம சங்கடமாய் போய்விட்டது! இது ராமாயணத்தில் வரும் கதை, இதைப்போன்ற நிலையைத்தான் ''தர்ம சங்கடம்'' என்பது.

☞ தனக்கு தனக்கு என்றால்
தாச்சலும் களை வெட்டுமாம்.

தாச்சல், என்றால் கோவணம்! ஒருவன் தன் சொந்தத் தோட்டத்திலே களை வெட்டும்போது, வேலை சீக்கிரமாக முடியட்டும் என்று, வேக வேகமாக வெட்டுவானாம். அந்த வேகத்தில் அவன் கட்டியிருக்கும் கோவணம்கூட, வேலை செய்யுமாம்! அதாவது, அங்குமிங்கும் ஆடி களையை வெட்டுமாம்! அவ்வளவு வேகமாக வேலை செய்வானாம்.

தனக்கு என்று வரும்போது, அக்கறை அதிகமாகி, வேலையில் வேகம் வந்துவிடும் என்பதை இப்படிச் சொல்லுவார்கள்.

☞ தவளை தன் வாயால் கெட்டது.

சிலர் தேவையில்லாமல் வளவளவென்று பேசியே தன் வாயால் கெடுவார்கள். அவர்களைப் பார்த்து, ''தவளை தன் வாயால் கெட்டது!'' என்று இதைச் சொல்வார்கள். தவளை சும்மாவே இருக்காது. இரவு நேரங்களில் ''கொர்'', ''கொர்'' என்று கத்திக்கொண்டே இருக்கும்! அந்த சத்தம் எந்த இடுக்கில் இருந்தாலும் அதைக் காட்டிக் கொடுத்து விடும். பாம்புகள் அந்த சத்தத்தின் அதிர்வினால் அது இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு வந்து, அதை விழுங்கும். இதைத்தான் 'தவளை தன் வாயால் கெட்டது' என்பார்கள்.

...தா...

☞ தார்ப்பாயில் வடிகட்டின கஞ்சன்.

தார்ப்பாய் கெட்டியாக இருக்கும்! அது தாரில் நனைக்கப் படுகிறது. அதனால், அதன் துவாரங்கள் அடைக்கப்பட்டு, அதில் தண்ணீர் இறங்காது! லாரி போன்ற வாகனங்களில் சரக்குகளை ஏற்றிச் செல்லும்போது, மழை நீரில் சரக்குகள் நனையாமலிருக்க, அதை வாகனங்களின் மேல் விரித்துக் கட்டி விடுவார்கள். சாதாரணமாக திரவங்கள் துணியில் வடிகட்டினால் அது தெளிவாக இறங்கும். ஆனால், தார்பாயில் என்னதான் வடிகட்டினாலும், ஒரு சொட்டுக்கூட இறங்காது. இவனிடமிருந்து ஒரு பைசா பெயராது என தெரிந்தால், அவனை ''தார்ப்பாயில் வடிகட்டின கஞ்சனப்பா'' என்று சொல்லி விடுவார்கள்.

...தி...

☞ **திரிசங்கு சொர்க்கம்.**

மேலேயும் செல்ல முடியாமல், கீழேயும் வர முடியாமல், அந்தரத்திலே இருப்பதைத்தான் ''திரிசங்கு சொர்க்கம்'' என்று சொல்வார்கள்! திரிசங்கு என்ற மன்னன், தான் உயிரோடு இருக்கும்போதே, சொர்க்கத்தைப் பார்த்துவிட ஆசைப்பட்டானாம்! இதை விஸ்வாமித்திரரிடம் சொல்ல, அவர் தன் தவவலிமையால் அவனை விமானத்தில் ஏற்றி, சொர்க்கத்திற்கு அனுப்பி வைத்தார். இதைத் தெரிந்த தேவர்கள், கோபம் கொண்டு ''சொர்க்கமும், நரகமும் மனிதர்களின் இறப்பிற்குப் பின்தான் முடிவு செய்யப்படும்! இவர் எப்படி விதியை மீறலாம்?'' என்று, திரிசங்குவை விமானத்திலிருந்து கீழே தள்ளி விட்டார்களாம். இதை அறிந்த விஸ்வாமித்திரர் கோபம் கொண்டு, பூமியை நோக்கி வந்த திரிசங்குவை அந்தரத்திலேயே நிறுத்தினார். தேவர்கள் மேல் கோபம் கொண்டு, அவர்களிடம் தர்க்கம் செய்தார். ''அங்கேயே ஒரு சொர்க்கத்தை உருவாக்குகிறேன் பார்!'' என்று கத்தினாராம். இதைக் கண்டு பயந்த முக்கடவுள்களும் விஸ்வாமித்திரரின் முன் நேரில் தோன்றி, அவரை அமைதிப்படுத்தி, முயற்சியை கைவிடும்படி கேட்டுக்கொண்டார்கள். விஸ்வாமித்திரரும் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, சமாதானம் அடைந்தாராம்! அதுவரை, மேலேயும் போக முடியாமல், கீழேயும் வரமுடியாமல், அந்தரத்திலே தொங்கிக் கொண்டிருந்த திரிசங்கு நிலை பரிதாபமாக இருந்ததாம்! இப்படி இரண்டுங் கெட்டான் நிலையிலே மாட்டிக் கொண்டவர்களைப் பார்த்து, அவன் நெலமை ''திரிசங்கு சொர்க்கமப்பா!'' என்பார்கள்.

☞ திருமண அவசரத்தில் தாலி கட்ட மறந்ததுபோல...

திருமண அவசரத்தில் தாலி கட்ட மறந்துவிட்டார்கள் என்பது சரியா? இது தவறு! திருமண அவசரத்தில் தாலி 'காட்ட' மறந்ததுபோல என்பதுதான் சரி! திருமணத்தின் போது, தாலியை தாம்பூலத் தட்டில் வைத்து, அனைவருக்கும் காட்டுவார்கள். ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ்வொரு விதமான தாலி இருக்கும். அதோடு, தாய் தன் தாலி கயிற்றிலேயிருந்து தலைமுறை, தலைமுறையாக அணிந்துவரும் குலச் சின்னமான சிலவற்றை எடுத்துக் கொடுத்திருப்பார்கள். தாலிக் கயிற்றில் அதையும் சேர்த்துக் கோர்த்திருப்பார்கள். அதை அனைவருக்கும் காட்டி, அவர்கள் ஆசி பெற்ற பிறகே மணமகன் மணப்பெண் கழுத்தில் தாலி கட்ட வேண்டும். திருமண அவசரத்தில், தாலி காட்ட மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இப்படிச் சொன்னார்கள். என்னதான் பரபரப்பு இருந்தாலும், ஒரு காரியத்தில் முக்கியமானவற்றை ஞாபகத்தில் வைத்து செய்ய வேண்டும் என்பதுதான் இது.

...தே...

☞ தேக்குப் போன்ற உடம்பு!

உடம்பை வலுவாக வைத்திருப்பவனைப் பார்த்து, 'அவன் தேக்குக் கட்டையப்பா!' என்று சொல்வார்கள். தேக்கில் அப்படியென்ன விசேஷம்? தேக்குக் கட்டையில் கரையான் அண்டாது, காளான் பிடிக்காது, இரும்புத் துரு ஏறாது! அதுபோலே, உழைத்து, உழைத்து உடலைக் கட்டாக வைத்திருப்பவர்களை நோய், நொடிகள் பாதிக்காது என்பதால், 'தேக்கு உடம்பு' என்று சொல்வார்கள். அதனால்தான் கதவு, கட்டில் போன்ற தரமுள்ள பொருட்களைத் தேக்கு மரத்தால் செய்கிறார்கள்.

...தொ...

☞ **தொட்டா சிணுங்கி.**

இது செடிகளில் ஒரு வகை. அதனைத் தொட்டாலோ, பூச்சிகள் வந்து அமர்ந்தாலோ அதன் இலைகள் உடனே சுருங்கிவிடும்! அதைப்போலே, சிலர் தொட்டதற்கெல்லாம் சிணுங்குவார்கள். வாயைத் திறக்காமல் மூக்கு வழியாக அழுவதைத்தான் சிணுங்குதல் என்பது. சிலர் எதற்கெடுத் தாலும் அழ ஆரம்பித்து விடுவதால், அவர்களைப் பார்த்துதான் "தொட்டா சிணுங்கி" என்பார்கள்.

...நா...

☞ **நாலு பேர் மதிக்க வாழணும்...!**

நம் இறுதிப் பயணத்தின்போது, நம்மைச் சுமந்து செல்ல நாலு பேர் வேண்டும். அந்த நாலு பேரை மட்டும் நாம் இனம்கண்டு கொண்டு பழக முடியாது! ஏனென்றால் அந்த நாலு பேர் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்! அதனால்தான் நாம் வாழும் காலத்தில் எல்லோரிடத்திலும் அன்போடும், அரவணைப்போடும் நடந்து, அனைவரின் மதிப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

...நீ...

☞ **நீறு பூத்த நெருப்பு.**

நெருப்பின் மேல் சாம்பல் பூத்திருக்கும். அதை சாம்பல் என நினைத்து நாம் தொட்டால், உள்ளே இருக்கும்

நெருப்பு நம்மை சுட்டுவிடும்! அதைப்போல், சிலரை நாம் வெளித்தோற்றத்தில் எடை போட்டுவிட முடியாது! அவர்கள் மனதிற்குள்ளேயே புழுங்கிக்கொண்டு, வெளிக்காட்டாமல் இருப்பார்கள். சமயம் வரும்போது அது வெளிப்படும். அவர்களைத்தான் "நீறு பூத்த நெருப்பு" என்றார்கள். (இதிலே உபரி செய்தி ஒன்று) நெருப்பை விட சாம்பல் மோசமானது! தீக்குண்டத்தில் இறங்குவதற்கு முன்னால், முறத்தைக் கொண்டு குண்டத்தில் வீசி சாம்பலை வெளியேற்றுவார்கள். காரணம்? தீ மிதிக்கும்போது, சாம்பல் பாதத்தில் ஒட்டிக் கொண்டு உடனே கொப்பளித்து விடும். நெருப்புக் கனலை சில வினாடிகள் தாங்கும் சக்தி நம் தோலுக்கு இருப்பதால், அதன்மீது காலை வைத்து வேகமாக ஓடிவிடலாம். நெருப்பின் சாம்பலைப்போல நெருப்பு காலில் ஒட்டிக்கொண்டு, உடனே கொப்பளிக்காது. சில வினாடிகள் நம் தோலுக்கு நெருப்பைத் தாங்கும் சக்தி உண்டு என்பதை அறிந்துகொள்ள அந்த காலப் பெண்கள் விறகு அடுப்பை மூட்டி சமையல் செய்யும்போது, வெளியே சிதறி விழுந்த நெருப்புக் கட்டியைத் தன் கையால் எடுத்து அடுப்புக்குள் போட்டுவிடுவதைப் பார்த்திருக்கலாம்.

...நொ...

☞ நொறுங்கத் தின்னால் நோய் வராது!

சில தீனிப் பிரியர்கள், அதிகமான உணவுகளை உட்கொள்வோருக்கு நோய் வராது என்று, இதற்கு பொருள் கொள்வார்கள். ஆனால், அது தவறு! நாம் உண்ணும் உணவுகளை நன்றாக நொறுங்கும்படி மென்று, தின்ன வேண்டும் என்பதுதான் இதன் பொருள். அப்போதுதான், நம் வாயில் உமிழ்நீர் அதிகமாகச் சுரந்து, நாம் உண்ணும்

ஆகாரம் உணவுக் குழாயைச் சென்றடைந்து சீக்கிரமாக ஜீரணமாகும். வயிற்றில் குழப்பம் இல்லையென்றால், நோய் நம்மை அண்டாது! அதனால் உணவுகள் நொறுங்க, நன்றாக மென்று தின்னும்படி சொன்னார்கள்.

...ப...

☞ பந்திக்கு முந்து... படைக்குப் பிந்து!

இது பந்தி பரிமாறுபவர்களுக்கு சொல்லப்பட்டதே தவிர, சாப்பிட வருபவர்கள் முண்டியடித்துக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்டதல்ல! ஏனென்றால், பந்தி பரிமாறுகிறவர்கள் சாப்பாடு, காய்கறிகளில் அதிக நேரம் புழங்குவதால், அதன் மசாலா வாசம் பிறகு அவர்களை சாப்பிட முடியாமல் செய்துவிடும்! அதனால், அவர்கள் பந்திக்கு முந்தி சாப்பிடட்டும் என்று சொன்னார்கள். 'படைக்குப் பிந்து' என்று சொல்வது...? ஒரு அரசன் அவசரப்பட்டு, எதிரிகளின் மீது படையெடுத்துச் செல்லக்கூடாது! தம்முடைய பலத்தையும், எதிரியின் பலம், பலவீனத்தையும் தெரிந்து வைத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். உதாரணமாக, பலம் கொண்ட பிராணிதான் முதலை! ஆனால், அதன் பலவீனம் அதனுடைய வாயிலே இருக்கிறது! அது தன் வாயை வேகமாக மூடும் அளவுக்கு, திறக்க முடியாது! காரணம், அதன் மேல் தாடை கனத்திருக்கும்! அதன் தசை நார்கள் பலவீனமானது! அது வாய் திறந்து நமக்கு கேடு விளைவிக்கும் முன், அதன் இரண்டு தாடைகளையும் கையில் இறுகப் பிடித்து அழுத்தி, கயிற்றால் கட்டிவிட்டால், அது நம்மை ஒன்றும் செய்ய முடியாது! இது முதலையின் பலகீனம்! இதைப்போலே, எதிரியின் பலகீனம் எங்கே இருக்கிறது என்று தெரிந்து பிறகு படை எடுக்க வேண்டும்.

☞ **பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!**

இங்கே பெறுவது என்பது குழந்தைகளை அல்ல! பதினாறு பேறுகளை! பேறு என்றால் செல்வம்! பெரியவர்கள் சொல்லும் அந்தப் பதினாறு பேறுகள் என்ன...? கல்வி, நோயின்மை, புகழ், அறிவு, பொருட்செல்வம், நெல், பெருமை, இளமை, வலிமை, அழகு, நன்மக்கள், துணிவு, வாழ்நாள், வெற்றி, நல்லூழ், நுகர்ச்சி! இதுதான். இந்த பதினாறு பேறுகள் இருந்தால் வாழ்க்கை இனிமையானது! சுகமானது! எனவே, இந்த "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழுங்கள்!" என்று பெரியோர்கள் வாழ்த்துவார்கள்!

☞ **பன்னாடை!**

"அவெ சுத்தப் பன்னாடையப்பா!" என்று கெட்ட நோக்கத்தோடு அலைபவர்களைப் பார்த்துச் சொல்லுவார்கள். பனை மரத்திலே பன்னாடை என்று ஒன்றிருக்கும். இதை சல்லடைபோல் பயன்படுத்துவார்கள். பதநீர் வடிகட்ட இதை உபயோகிப்பது உண்டு! இதில் வடிகட்டினால், தெளிவானது வெளியேறி, கசடு மட்டும் இதில் தங்கும்! நல்லதை விட்டு விட்டு, தீயவைகளை மட்டும் மனதில் தங்கவைத்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து, 'பன்னாடைகள்' என்று சொல்வதுண்டு.

...பா...

☞ **பாம்புக் காது.**

"அவனுக்குப் பாம்புக் காது! நாம எங்கிருந்து பேசினாலும், அவன் காதிலே விழுந்திருமப்பா...!" என்பார்கள். ஆனால்,

பாம்புக்கு காதே இல்லை! அதற்குப் புறச்செவியோ, செவி துவாரமோ கிடையாது! அது காற்றின் மூலம் வரும் எந்த ஒலிகளையும் கேட்க முடியாது! தரையின் அதிர்வுகளைக் கொண்டுதான், பாம்புகள் உணர்ந்து கொள்கின்றன! பாம்பு மகுடிக்கு ஆடுவதெல்லாம், மகுடியின் அசைவினாலே தவிர, அதிலிருந்து வரும் ஒலியைக் கேட்டல்ல, என்று ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள். அவனுக்குப் ''பாம்புக் காது'' என்று சொல்வது, தூரத்திலிருந்து நடந்து வந்தாலும் அதன் நில அதிர்வுகளைக் கொண்டு, பாம்பு தெரிந்து கொள்வதைப் போல, தாம் பேசுவது, அவன் காதுக்கு எட்டி விடுகிறது! என்பதைத்தான் இப்படிச் சொல்லி இருப்பார்கள்.

☞ 'பாவலா' பண்றாப்பா!

சிலம்பாட்டத்தில், காலை மாற்றிமாற்றி வைத்து, அங்கும், இங்கும் நடப்பார்கள். எதிரியை பயமுறுத்துவதற்காக அப்படிச் செய்வார்கள். அதை 'பாவலா' பண்ணுவது என்பார்கள். அதுபோல், சில பேர் ஏதோ காரியத்தை சாதிப்பதைப் போல் 'பாவலா' பண்ணுவார்கள். அது வெறும் நடிப்புதான்!

...பி...

☞ பிரசவ வைராக்கியம், மயான வைராக்கியம்.

''அவங்க வைராக்கியம் பிரசவ வைராக்கியம், மயான வைராக்கியம் போலேதான். அது எவ்வளவு நாளைக்கு இருக்குமின்னு பார்ப்போம்'' என்று பிறரைப் பார்த்து, சிலர் சொல்லுவதுண்டு! பிரசவ வைராக்கியமும், மயான வைராக்கியமும் என்ன? வைராக்கியங்களில் திடீரென அப்போதைக்குத் தோன்றும் வைராக்கியமும் உண்டு! அப்படித் தோன்றுவதுதான் இந்த பிரசவ வைராக்கியமும்,

மயான வைராக்கியமும். பெண்கள் பிரசவ காலத்தின்போது ஏற்படும் வலியை தாங்கமுடியாமல் அவஸ்ப்தை படுவார்கள். இடுப்பிலும், வயிற்றிலும் கையை வைத்து கத்துவார்கள். அவர்கள் மரண வேதனைப்படும்போது, "போதும் இந்த ஆண் உறவு, இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த உறவு வைத்துக் கொள்ளக் கூடாது!'' என்று சபதம் எடுத்துக்கொள் வார்கள். அந்த சபதம் குழந்தை பிறக்கும் வரைதான். அதன்பின் அது நீடிக்காது! அதேபோல், சாவுக்குச் செல்பவர்கள் சிலர், சாவைப் பற்றிப் பேசும்போது, ''என்ன இருந்து என்ன பிரயோஜனம்? செத்த பிறகு கூடவா வரப்போகுது? அதுக்குள்ளே இந்த மனுசங்களுக்குத்தான் என்ன ஆசை! எதை வேணு மின்னாலும் செஞ்சு காசு சம்பாதிக்க நெனைக்கறாங்க! நாம ஒழுங்கா நடந்துக்கணும்'' என்று வைராக்கியம் எடுப்பார்கள். இது சவஅடக்கம் முடிந்து வீடு திரும்பும்வரைதான்.

☞ பிறந்த குழந்தைக்கு தேன் வைப்பதேன்?

பிறந்த குழந்தையைப் பார்க்க வருபவர்களை அதன் நாக்கில் தேனைத் தொட்டு வைக்கச் சொல்வார்கள். (இதை மருத்துவர்கள் கூடாது என்கிறார்கள்). ஆனால், தேனைத் தொட்டு வைக்கச் சொல்லி எந்தப் பெரியவர்களும் சொல்ல வில்லை! ''சேனைத் தொட்டு வையுங்கள்'' என்றுதான் சொன்னார்கள். 'சேனை' என்றால் 'புத்தி!' சிறந்த குணமும், நல்ல ஒழுக்கமும் கொண்ட பெரியவர்களைப் பார்த்து, குழந்தைக்கு ''சேனை தொட்டு வைய்யுங்கள்'' என்று சொல்வார்கள்! குழந்தைகள் ஒழுக்கமும், நல்ல பண்பும் உள்ள புத்திசாலி களாகவும் வளர. பெரியவர்களை, குழந்தைகளைத் தொட்டு வாழ்த்துங்கள் என்று சொன்னார்கள். ஆனால், இன்று வந்தவர்களையெல்லாம் தேனைத் தொட்டு வைக்கச் சொல்கிறார்கள். இது குழந்தையின் நலத்தைப் பாதிக்கும்!

...பு...

☞ புழு, பூச்சியைக் காணோம்?

"என்ன இவ வயித்திலே ஒரு புழு பூச்சியைக் காணோம்?" என்று திருமணமாகி நீண்ட நாட்கள் கர்ப்பம் தரிக்காமல் இருக்கும் பெண்ணைப் பார்த்துச் சொல்வார்கள். அவர்கள் புழு, பூச்சி என்று சொல்லுவது, பெண் குழந்தையையும், ஆண் குழந்தையையும்தான். அது எப்படி என்றால், பெண்கள் பிறந்து, தாய்வீட்டில் வளர்ந்து, பிறகு திருமணமாகி கணவன் வீட்டிற்குப் பட்டுப்பூச்சியைப் போல் பறந்து சென்று விடுவதால், பெண்களை 'பூச்சி' என்றும், கடைசிவரை உடனிருந்து, உரிமையோடு தாய், தந்தையரை ஒட்டிக் கொண்டு புழு போல் துளைத்து எடுப்பதால் ஆண்களை 'புழு' என்றும் சொல்கிறார்கள்! அவள் வயிற்றில் ஆணோ, பெண்ணோ பிறக்கவில்லையே என்பதைக் குறிக்கத்தான், 'புழு, பூச்சி' என்கிறார்கள்.

☞ புடிச்சாலும் புளியங்கொம்பா புடிக்கணும்.

புளியமரம் பலமுள்ளது. அதன் கொம்பு உறுதியாய் இருக்கும்! அதைப் பிடித்து எவ்வளவு தொங்கினாலும் அது உடையாது! முருங்கமரம் போன்றவை பலமாக இருக்காது. அதில் தொங்கினால் 'பொடக்'கென்று ஒடிந்துவிடும். அதுபோல் ஒருவரை நாடிப் போனால், அவர்கள் நம்பகமாகவும், பயனுள்ளவர்களாகவும் இருந்தால், 'புடிச்சாலும் புடிச்சாங்க, புளியங்கொம்பா புடிச்சிட்டாங்க!" என்று சொல்வார்கள்.

☞ புண்ணியத்துக்குக் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்து பதம் பார்த்தானாம்.

நல்ல காரியங்களுக்கோ, துக்க காரியங்களுக்கோ புண்ணியம் கருதி மாட்டைத் தானம் செய்வார்கள். இதை

'கோதானம்' என்பார்கள். அதைப்போன்ற மாட்டைப் பெற்றுக் கொண்டவன், அதன் பல்லைப் பிடித்துப் பார்த்தானாம்! ஏனென்றால், மாட்டின் வயதை அறிய, பல்லை எண்ணிப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்! மூன்று வயதென்றால் இரண்டு பல் போட்டிருக்கும்! அதன் பிறகு வருடத்திற்கு இரண்டு பல் வீதம் முளைக்கும். அதைக் கொண்டு அதன் வயதை அறியலாம். புண்ணியத்திற்காக கொடுத்த மாட்டிற்கு வயது எத்தனையானால் என்ன? அது தானம் தந்ததுதானே! இதேபோல், இலவசமாக கிடைத்ததே என்று எண்ணாமல், அதன் தரத்தை துருவிப் பார்ப்பவர்களும் உண்டு!

...பூ...

☞ பூனை மாதிரி நழுவறான்!

இந்திரன் அகலிகையை, அவள் புருஷன்போல் உருவெடுத்து வந்து, கெடுத்தானாம்! அந்த நேரத்தில் அகலிகையின் கணவர் கௌதம ரிஷி வருவதை அறிந்து கொண்ட இந்திரன் பூனையாக மாறி சத்தமில்லாமல் வெளியே நழுவப் பார்த்த கதை ராமாயணத்தில் வருகிறது! இதைத்தான், செய்கிற தப்பையும் செய்துவிட்டு, திருட்டுப் பூனையைப்போல் நழுவப் பார்ப்பவர்களுக்காக சொல்லப்பட்டது.

☞ பூனைக்கு மணி கட்டுவது யார்?

எலிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து, பூனையினிடமிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்ததாம். அதன் கழுத்திலே ஒலி வரும் மணியைக் கட்டிவிட்டால், அது நடந்து வரும்போது, மணிச்சத்தம் கேட்கும். அந்த சத்தத்தைக் கொண்டு

நாம் தப்பித்து ஓடிவிடலாம் என்று முடிவு செய்ததாம். ஆனால், பூனையின் அருகிலே சென்று, அதன் கழுத்திலே மணியைக் கட்டுவது யார்? அது 'லபக்'கென்றல்லவா நம்மைப் பிடித்துத் தின்றுவிடும் என்று ஒவ்வொரு எலியும் பயந்ததாம்! அதைப் போல், ஒரு காரியத்தைச் செய்துமுடிப்பதற்கு முன்னால், அதை எதிர்கொள்ள சில ஆபத்தும் இருக்கிறது என்று தெரிந்தபிறகு, யார் முன்வருவார்கள். இதைத்தான் ''பூனைக்கு மணி கட்டுவது யார்?'' என்று சொல்வது.

...பெ...

☞ பெண் புத்தி பின் புத்தி.

பெண்கள் புத்தி சொல்வதிலே பின்தங்கியவர்கள் என்று இதற்கு பொருள்கொள்பவர்களும் உண்டு! ஆனால், இதன் சரியான பொருள், பெண்கள் எதையும் நிதானமாக சிந்தித்து, செயல்படுபவர்கள். அவசரக்காரர்கள் போலல்லாமல் ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்னால் அதன் 'பின்விளைவு களை' முன்கூட்டியே யோசிக்கும் தன்மை உடையவர்கள் பெண்கள் என்பதால், பெண் புத்தியை 'பின்புத்தி' பின்னால் வருவதையோசிப்பவர்கள் என்கிறார்கள்.

☞ பெருங்காய டப்பா!

பெருங்காயம் போட்டு வைத்திருந்த டப்பாவில் அதன் வாசம் இருந்துகொண்டே இருக்கும்! அறிவுள்ள ஒருவர் ஓய்ந்துவிட்டாலோ, வசதி படைத்த ஒரு நல்லவர் நலிந்து போனாலோ, அவர்களுக்குள்ள திறமையோ, நல்ல குணமோ போய்விடுவதில்லை. அவர்களை ''பெருங்காய டப்பா''வைப்

போல் என்று சொல்வதுண்டு! பெருங்காயம் தீர்ந்தாலும் அதன் வாசம் போகாத டப்பாவைப் போல், அவர்கள் அறிவும், பணிவும் போவதில்லை.

...பொ...

☞ **பொம்பளை சிரிச்சா போச்சு,**
புகையிலை விரிச்சா போச்சு!

பெண்கள் அடக்கமாக இருக்கவேண்டும் என்பதற்காக இதைச் சொல்வார்கள். புகையிலை விரித்தால் காற்றுப்பட்டு, அதன் காரம் போய்விடும் என்றார்கள். போகட்டும், பெண்களுக்கு சிரிக்க ஏன் கட்டுப்பாடு போட வேண்டும்? இதற்கு உதாரணமாக பாண்டவர்களின் மனைவி பாஞ்சாலியை சொல்வார்கள். மகாபாரதத்தில் தர்மன் நடத்திய வேள்வியில் கலந்துகொண்ட துரியோதனன் கால் தடுக்கி விழப்போய், அதைப் பார்த்து பாஞ்சாலி சிரித்தாளாம். அதன் காரணமாகத்தான் மகாபாரதப் போர் நடந்ததாம். பொம்பளை சிரித்ததால் அவமானம் தாங்காமல் போர் மூண்டது என்பார்கள். போர் மூண்டதற்குப் பல காரணங்கள் இருந்தும் இதை மட்டும் சொல்வது எவ்வளவு அபத்தம்.

...ம...

☞ **மழை விட்டும் தூவானம் விடவில்லை.**

ஒரு விஷயத்தில் தீர்வு கண்டபிறகும், சம்மந்தப்பட்டவர்கள் 'தொண... தொண...' என்று அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால், ''மழை விட்டும் தூவானம் விடலை

யேப்பா'' என்று சலித்துக் கொள்வார்கள். அந்த நிலை, பிரச்சனையில் ஏற்பட்ட தலைவலியைவிட, அதிக தலைவலியை ஏற்படுத்தும். மழை பெய்து ஓய்ந்த பின்னும், சில நேரங்களில் வானத்திலே இருந்து ''சல, சல''வென்று சிறு துளிக்ள் தூறிக்கொண்டே இருக்கும். இது சீக்கிரம் விடாது! மழையை விட சலிப்பை ஏற்படுத்துவது இதுதான்.

...மு...

☞ **முதலைக் கண்ணீர் வடிக்கிறான்.**

முதலை அழுவதில்லை! அதன் கண்களிலேயிருந்து சில சமயம் நீர் வடியும்! அது, தான் சாப்பிடும் உணவை அப்படியே விழுங்கிவிடும்! அந்த உணவு ஜீரணமாக அதன் வயிற்றிலே ஒரு திரவம் சுரக்கும்! அந்தத் திரவம் அதிகமாகிப் போனால், அதனுடைய கண் வழியாக வெளியேறும். அது, தான் சாப்பிட்ட உணவு ஜீரணிக்க வேண்டும் என்ற சுயநலத் திற்காக வெளியேற்றும் நீரே தவிர, ஏதோ அனுதாபத்திலே அழுது வடிக்கும் கண்ணீர் அல்ல! இதைத்தான் பொய்யாக அழுபவர்களைப் பார்த்து, ''முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்'' என்று சொல்வது.

...மொ...

☞ **மொளச்சு மூணு இலை விடலே...**

தன் வயதுக்கு மீறிய வார்த்தைகளைப் பேசும் குழந்தை களைப் பார்த்து, ''மொளச்சு மூணு இலை விடலே, இதுக்கு வாயைப் பாரு!'' என்பார்கள். அதென்ன மூன்று இலை? செடி வளரும்போது, முதலில் துளிர் விடும், பிறகு அது இளம்

தளிராகும். அதன்பின் இலையாகும். இந்த மூன்று நிலைக்குப் பிறகுதான், பிஞ்சாகி, காயாகி, பழம் விடும். அப்போதுதான் செடி பக்குவமடையும். முன்சொன்ன மூன்று நிலையே அடையாத குழந்தைகள் வாயடித்தாலோ, தவறான சொற்கள் ஏதேனும் பேசினாலோ இதைச் சொல்வார்கள்.

...யா...

☞ **யானை இருந்தாலும் 1000 பொன்,**
இறந்தாலும் 1000 பொன்.

யானை இருந்தாலும், இறந்தாலும் அதன் மதிப்பு குறைவதில்லை! அது உயிரோடு இருக்கும்போது என்ன விலையோ, அதே விலைதான் அது இறந்தபின்னும்! ஏனென்றால், அது இறந்ததற்குப் பிறகும் அதனுடைய 'தந்தம்' விலை போகிறதல்லவா? அதைப்போல நல்ல குணமுள்ளவர்கள் இறந்துவிட்டாலும், அந்த குணத்தின் மதிப்பு நிலைத்து நிற்கும்!

...வ...

☞ **வளர்த்த பிள்ளை சோறு போடாவிட்டாலும்,**
வைத்த பிள்ளை போடும்.

வளர்த்த பிள்ளைகள் தம்மை கவனிக்காமல் விட்டு விட்டாலும், தான் விதைத்து வைத்த மரம், செடி, கொடிகள் கைவிட்டுவிடாது! குறிப்பாக தென்னம்பிள்ளை வளர்ந்து அது காய்க்கத் துவங்கினால் வருடம் முழுவதும் வருமானத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். யார் தயவும் இல்லாமல் வாழ அது உதவும். இதைத்தான் பெற்று வளர்த்த பிள்ளைகள் சோறு போடாவிட்டாலும், நட்டு வைத்த தென்னம்பிள்ளை சோறு போடும் என்பார்கள்.

☞ வலது காலை எடுத்து வைத்து வா!

'வலது காலை எடுத்து வைத்து வா!' என்றும், 'வலது கையாலே கொடுத்துப் பழகு!' என்றும் பெரியவர்கள் சொல்வார்கள். வலதுக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றால், இந்த பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனை வலதுபக்கமாக சுற்றி வருகிறது! திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்குள் நுழையும் மணப் பெண்கள் பூமியைப்போல் எதையும் தாங்கி, அனுசரித்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் ''வலது காலை எடுத்து வைத்து வா!'' என்று அழைக்கிறார்கள்.

☞ வத்தி வைக்கறான்.

பட்டாசு திரியிலே நெருப்பை பற்ற வைத்தால், அது மெதுவாக புகைந்து வெடிக்கும். ஒருவனை தூண்டிவிட, அடுத்தவன் மேல் கொஞ்சம் கொஞ்சமாக பொறணி சொல்லி, அவனுக்குக் கோபத்தை வரவழைக்க பேசுபவனைப் பார்த்து, ''வத்தி வைக்கறான் பாரு!'' என்று சொல்லுவார்கள். அடுத்தவன் மேல் பகையை உண்டாக்க, நல்லவன்போல் அருகில் அமர்ந்து கிசு கிசுப்பவனைத்தான் ''வத்தி வைக்கறவன்'' என்று சொல்வது.

☞ வாக்குக் கற்றவரும், போக்குக் கற்றவரும்.

''வக்கற்றவருக்கு வாத்தியார் வேலை'', ''போக்கற்றவருக்கு போலீஸ் வேலை'' என்று எவ்வளவு தவறான வார்த்தையைப் பிரயோகிக்கிறார்கள். இதன் சரியான சொல் தொடர் என்னவென்றால், மாணவர்களுக்குக் கற்றுத்தரும் வாத்தியார்கள் வாக்குத்திறன் படைத்தவர்களாக இருப்பார்கள். அப்போதுதான் மாணவர்கள் புரிந்துகொண்டு, கற்பார்கள். அதைத்தான் வாக்குக் க்ற்றவருக்கு வாத்தியார் வேலை என்றும், போக்குக்

காட்டித் தப்பிக்க நினைக்கும் குற்றவாளிகளை தெரிந்துகொண்டு அவர்களைக் கண்டுபிடிக்கும் போக்கைக் கற்றவருக்கு போலீஸ் வேலையும் என்றும் சிறப்புறச் சொன்னதுதான் தவறாக மாறிவிட்டது!.

...வீ...

☞ வீண் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு.

தனக்கு வசதி இல்லையென்றாலும், வெட்டி ஜம்பம், வீண் ஜம்பம் பேசுபவர்கள் உண்டு. அடுத்தவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக, தாங்கள் சாப்பிட்ட இலையில், விளக்கெண்ணெயைத் தடவி, இலையை வெளியில் போடுவார்கள். அந்த இலையில் எண்ணெய் தடவி இருப்பதால், மினுமினுப்பாகத் தோன்றும்! பளபளப்பாக இருக்கும் அந்த இலையைப் பார்த்து, அக்கம்பக்கத்தார் ''அடடா, எவ்வளவு நெய் ஊற்றி சாப்பிட்டிருக்கிறார்கள்'' என்று நினைத்துக் கொள்வார்களாம். இது அவர்களுக்குப் பெருமையாய் இருக்குமாம். மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காகவே கையில் உள்ளதை இழப்பவர்கள் இவர்கள்!

☞ வீட்டுக்கு வீடு வாசப்படி.

மனம் நொந்துபோய் தங்கள் வீட்டிலுள்ள பிரச்சனையை வேண்டியவர்களிடம் சொல்லும்போது, ''வீட்டுக்கு வீடு வாசப்படி'', எல்லாத்து வீட்டிலையும் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யுது, அதுக்காகக் கவலைப்பட்டா முடியாது! என்று நொந்து போனவர்களை திருப்திப்படுத்துவார்கள்! வாசப்படி இல்லாத வீடில்லை என்பதைப்போல, பிரச்சனை இல்லாத வீடும் இல்லை! என்பதை இப்படிச் சொல்லுவார்கள்.

ஏனென்றால்...? எதற்கென்றால்...? எப்படியென்றால்...?

தங்கம் கறுப்பதில்லை ஏன்?

எத்தனை உலோகங்கள் இருந்தாலும் தங்கத்தின் மவுசு குறைவதில்லை! காரணம் அது அரிதாகக் கிடைக்கும் பொருள்! சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது! குறைந்த அளவே பூமியில் உள்ளது! ஆகவே அது விலைமதிப்புள்ளதாக இருக்கிறது! அதனால்தான் மனிதர்கள் அலங்காரப் பொருளாக அதை ஆபரணம் செய்து அணிந்துகொள்கிறார்கள். வருங்கால சேமிப்பாகவும் கருதுகிறார்கள். தங்கம், எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அதன் பளபளப்பும், ஜொலிப்பும் மாறுவதில்லை! காரணம், அது எந்தப் பொருளுடனும் எளிதில் வேதிச்செயல் புரிவதில்லை! குறிப்பாக, காற்று, நீர், இரசாயனங்கள் போன்றவைகளால் அது மாற்றம் கொள்வதில்லை! எனவே, தங்கம் கறுப்பதில்லை!

தங்கத்தின் தரம் அறிய...

தங்கத்தின் தரத்தை 'காரட்' முறையில் கணக்கிடு கிறார்கள். சுத்தமான தங்கம் என்பது 24 காரட்! அதை 24 பகுதிகளாகப் பிரித்து, அதில் 2 பகுதி செம்பைச் சேர்த்தால்,

அது 22 காரட்! பகுதி செம்பைச் சேர்த்தால் அது 18 காரட் என்றும் தரம் பிரிப்பார்கள். ஆக, 24 காரட் என்பது சொக்கத் தங்கம். அதில் செம்பு கலந்தால்தான் நகை செய்ய முடியும் என்கிறார்கள். அதில் மற்ற உலோகங்கள் கலக்கும் அளவுக்கு அதன் தரம் மாறுகிறது! சரியான தரத்தை அறிய, ''காரட் மீட்டரில்'' தங்கம் வாங்கும் கடைகளிலேயே அறிந்துகொள்ளலாம்.

கோழி முதலா? முட்டை முதலா?

கோழி முதலில் வந்ததா? முட்டை முதலில் வந்ததா? முட்டையிட கோழி வேண்டும். கோழி வர முட்டை வேண்டும். எது முதலில் வந்தது? கோழி தானாக உருவாகி இருக்க முடியாது! உயிரணுக்களில் இருந்துதான் வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். அந்த உயிரணுக்கள் முட்டைக்குள்தான் இருந்திருக்க வேண்டும். சரி, முட்டைக்குள் கோழி உயிரணுக்கள் எப்படி வந்தது? பிரபல விஞ்ஞானி ஜான் புக்பீல்ட் என்பவர் டி.என்.ஏ. மரபணு சோதனையின் மூலம், எப்போதாவது அபூர்வமாக நடக்கும் பிறப்புக் குறைபாடுகளினால், புதிய இனம் தோன்றும்! கன்றுக்குட்டியின் உடலும், பன்றியின் தலையும் இணைந்திருப்பதைப் போன்ற சில அதிசயப் பிறவிகள் உருவாகின்றன! இது வேறு இனக்கலப்பால் உண்டாகலாம்! அதைப்போல வேறு பறவை இனத்தின் கலப்பினால் உருவான முட்டையிலிருந்து வந்ததுதான் கோழி! புதிய உயிரினத்தின் வளர்ச்சிகள் முட்டையிலிருந்துதான் ஆரம்பமாகும்! எனவே, முட்டைதான் முதலில் வந்தது! என்றும் ஆதாரங்களோடு விளக்கியுள்ளார். இனி, இம்மாதிரி கேள்வியால் உங்களை யாராவது மடக்க நினைத்தால், பரிணாம ஆராய்ச்சியில் நெம்பர் ஒன் விஞ்ஞானி ஜான் புக் பீல்ட் கருத்தை எடுத்து வையுங்கள்!

'ஹார்ஸ் பவர்' என்றால் என்ன?

தண்ணீர் இறைக்கவும், இயந்திரங்களை இயக்கவும் மின்சார மோட்டாரை பயன்படுத்துகிறார்கள். அதன் திறனை 'ஹார்ஸ் பவர்' என்று சொல்வார்கள். இதை ஆங்கிலத்தில் சுருக்கமாக 'எச்.பி' என்பார்கள். 'ஹார்ஸ்' என்பது குதிரையையும், 'பவர்' என்பது அதன் இழுக்கும் வேகத்தையும் குறிக்கும். மின்சார மோட்டாரின் இழுக்கும் திறனை, குதிரையின் வேகத்தோடு ஏன் நிர்ணயம் செய்தார்களென்றால், ஆரம்ப காலத்தில் மனிதன் கொடிய விலங்குகளிடமிருந்து தப்பிப்பதற்கும், வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அவனுக்கு வேகம் தேவைப்பட்டது! குதிரையின் வேகத்தைக் கண்டறிந்த அவன், அதைப் பழக்கி, தன் பயணங்களுக்கும், பாதுகாப்புக்கும் பயன்படுத்திக் கொண்டான்! அதன் உபயோகம் அவனுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது! அதன் பிறகு, அவன் கண்டுபிடிப்புகள் அத்தனைக்கும் குதிரையின் இழுக்கும் வேகத்தையே அளவாகக் கொண்டான்! அதுவே 'ஹார்ஸ் பவர்'.

பிரம்மாவுக்கு, சரஸ்வதிக்கு, நாரதருக்கு கோவில் இல்லாதது ஏன்?

பிரம்மாவைப் படைப்புக் கடவுள் என்பார்கள்! அவர் தனக்கு ஒரு கோவில் இருந்து, தன்னை வணங்க வரும் பக்தர்கள், மீண்டும் ''என்னைப் படைத்து விடாதே! நான் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க வேண்டும்'' என்று வேண்டினால், அவருக்கு படைக்கும் தொழிலே இல்லாமல் போய்விடும்! அவர் என்ன செய்வார்? நமக்கு எதற்கு இந்த வம்பு! என்றுதான் தனக்குக் கோவிலே வேண்டாமென்று சொல்லிவிட்டாராம்! பிரம்மாவின் மனைவி சரஸ்வதியோ,

தன் கணவனுக்கு இல்லாத கோவில் தனக்கும் வேண்டாமென, கோவில் எழுப்புவதை விரும்பவில்லையாம். அவர்கள் புத்திரரான நாரதரோ, தன் தாய் தந்தையருக்குக் கோவில் இல்லாதபோது, தனக்கெதற்கு என முடிவு செய்துவிட்டாராம். எனவே, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கும் கோவில் இல்லாமல் போயிற்று! என்பார்கள்.

விநாயகருக்கு தோப்புக்கரணம் ஏன்?

இரண்டு காதுகளைக் கையால் பிடித்துக்கொண்டு, விநாயகர் முன்பு தோப்புக்கரணம் போடுகிறார்கள். கைகளால் காதுகளை அழுத்திப் பிடிக்கும்போது, காதின் வழியாக மூளைக்குச் செல்லும் நரம்புகள் உணர்வு பெற்று, மூளைக்கு இரத்தம் நன்றாகப் பாய்கிறது! அதன் காரணமாக, அறிவு வளர்ச்சி பெறுகிறது என்று அறிவியல் கூறுகிறது! இதைத்தான் ஆன்மிகவாதிகள் விநாயகர் முன் இரண்டு கைகளால் காதுகளைத் தொட்டு, தோப்புக்கரணம் போட்டு, தலையில் குட்டிக் கொண்டால், அறிவு வளரும் என்கிறார்கள்! மக்குமாணவர்களை ஆசிரியர்கள் காதைப் பிடித்து திருகி, தலையில் கொட்டுவதும் இதனால்தானே?

கோவில் விசேஷங்களில் விலங்குகள் ஊர்வலம் வருவது ஏன்?

கோவில் திருவிழாவின்போது, சுவாமி சிலையை ஊர்வலமாக எடுத்து வருவார்கள்... அதில் பக்தர்கள் கலந்து கொள்வார்கள். ஊர்வலத்திற்கு முன்னதாக, யானை, காளை போன்ற விலங்குகளையும் அழைத்து வருவார்கள். யானையின் துதிக்கையால், நீர் தெளிக்கச் செய்வார்கள். அது எதற்கென்றால், யானையின் சுவாசக் காற்று சுத்தமானது! அது ஊர்வலத்தில்

கலந்துகொள்வோர் மீது பட்டால், அவர்கள் உடல்கள் சுத்த மடையுமாம். அதைப்போலவே, காளைகளின் வாயிலிருந்து வெளியேறும் நுரையும், ஊர்வலத்தில் யாராவது குளிக்காமல் இருந்தாலும், அவர்கள் குளித்த நிலையை ஏற்படுத்துமாம்! அதற்காகத்தான், அவைகளை ஊர்வலமாக அழைத்துவரும் ஐதீகம் என்று சொல்கிறார்கள்.

கடவுள்களுக்கு உயிர்கள் பலி ஏன்?

அன்பைப் போதிக்க வேண்டியவர் கடவுள்! அவருக்கு ஏன் உயிர் பலி என்றால்? அதற்கு இப்படிக் காரணம் சொல் கிறார்கள். மனிதன் தன்னிடமுள்ள தீயகுணங்களை கடவுளுக்கு பலி கொடுப்பதன் அடையாளமாகத்தான் இந்த உயிர்களைப் பலி கொடுக்கிறார்களாம். வெள்ளாடு காமம் மிக்கது! எருமை கோபம்கொண்டது! பூனை திருட்டுத்தனம் உள்ளது! செம்மறியாடு மோகம் உள்ளது! ஆகவே, அவைகளை பலி கொடுப்பதன் மூலம், தங்கள் தீயகுணங்களை கடவுளுக்கு பலி கொடுத்ததைப் போல் ஆகுமாம்! மிருகங்களின் இத்தனை தீயகுணங்களும் மனிதனுக்கு உள்ளது பார்த்தீர்களா?

பூஜையில் தேங்காய், சூடம் ஏன்?

பூஜையின்போது தேங்காய் உடைத்து, கற்பூர ஆராதனை செய்வது என்பது முக்கியமாக செய்கிறார்கள். தேங்காய் உடைப்பதேன்? தேங்காயினுள்ளே கலப்படம் இல்லாத, பரிசுத்தமான வெண்மை இருக்கிறது! இது மனதின் தூய்மையை வெளிக்காட்டவும், இதேபோல் சாம்பல் இல்லாமல் சூடம் எரிந்து அவிகிறது! இது பூஜை செய்யும் நாங்கள் பரிசுத்தமான வர்கள், ஜோதியில் பக்தியோடு கலந்திருக்கிறோம் என்றும் வெளிப்படுத்தவே இவைகள் செய்யப்படுகின்றன என்கிறார்கள்.

மாவிலைத் தோரணம் கட்டுவது ஏன்?

விசேஷ நாட்களில், மாவிலையை கயிற்றில் கோர்த்து வாசற்படியில் கட்டுவார்கள். மாவிலையின் காம்பைக்கொண்டே, அந்த இலையில் ஒரு சிறு துவாரமிட்டு, காம்பை நுழைத்து கட்டுவார்கள். காம்பினுள் இருக்கும் பால், காற்றில் கலந்து, நம் மூச்சுக்காற்றில் நோய் கிருமிகள் கலக்காமல் செய்துவிடுமாம். இதற்காகவே மாவிலைத் தோரணம் கட்டுகிறார்கள்.

அரோகரா!

அண்ணாமலைக்கு 'அரோகரா' என்று சிவனை வணங்கு வார்கள். அரோகரா என்றால் என்ன? சிவனுக்கு 'அரன்' என்ற ஒரு பெயர் உண்டு. பக்தர்கள் அடுத்தடுத்து சிவனை அழைக்க அரன், அரன் என்றார்கள். அதுவே 'அரா ஹரா' என்றாயிற்று. பின்னர் அது 'அரோகரா' என்று மாறியது! 'அரோகரா' என்றால், சிவனை இருமுறை அழைப்பதாகப் பொருள்.

போகிப் பண்டிகை ஏன்?

பொங்கலுக்கு முதல் நாள் அதாவது மார்கழி மாதத்தின் கடைசி நாள் ''போகிப் பண்டிகை'' கொண்டாடப்படுகிறது! அன்று வீட்டிலுள்ள பழைய பொருட்களையும், பயனில்லாத பொருட்களையும், வெளியே 'போக்கி' தீயிட்டுக் கொளுத்து வார்கள். அநாவசியப் பொருட்களையும், அவசியமில்லாதவை களையும், வீட்டிலே இருந்து போக்குவதால், அந்த நாள் 'போக்கி' பண்டிகை என்றாயிற்று! அதைத்தான் போகிப் பண்டிகை என்பார்கள்.

திருமணத்தில் கெட்டிமேளம் கொட்டுவது ஏன்?

திருமணத்தின்போது, மணமகன், மணமகள் கழுத்திலே தாலி கட்டும் வேளையில், "கெட்டிமேளம்", "கெட்டிமேளம்" என்று கூவுவார்கள். அது எதற்கென்றால், அந்த நேரத்தில் யாராவது தகாத வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தாலோ, அல்லது தும்மினாலோ, இருமினாலோ அது அபசகுனம் என்று கருதுகிறார்கள்! அது வெளியே கேட்கக்கூடாது என்பதற்காக கெட்டிமேளத்தை பலமாக வாசிக்கச் சொல்லுவார்கள். மேளக் காரர்களும் இடைவிடாது பெரும் சப்தத்துடன் மேளத்தை வாசிப்பார்கள். கெட்டிமேளம் கொட்டுவதற்கு இதுதான் காரணம்.

வளைகாப்பு வைப்பது ஏன்?

திருமணமாகி ஒரு பெண் கருவுறும்போது, அவளுக்கு மனதில் பயம் இருக்கும்! முதல் பிரசவம் என்பதால், ஏதோ எப்படியோ என்று அவள் மனம் அச்சத்தால் அலைமோதும்! இதை அறிந்துதான் பெரியோர்கள், கரு வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் அவள் மகிழ்ச்சியுடன் இருக்க சடங்குகள் வைப்பார்கள். மூன்றாவது மாதத்தில் மாமியார்கள் பூச்சூட்டி, புதிய புடவை வாங்கிப் பரிசளிப்பார்கள். ஐந்தாவது மாதத்தில் கணவனின் சகோதரிகள் அவளுக்கு விருந்து படைப்பார்கள். அதன்பிறகு உற்றார் உறவினர்கள் அவளுக்குப் பிடித்த பலகாரங்களை கொண்டுவந்து வைப்பார்கள். கருவுற்ற காலத்தில் ஒரு பெண் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். நல்ல பேச்சுகளையும், ஓசைகளையும் கேட்கவேண்டும். அதுதான் அவளுக்கும் நல்லது, வயிற்றில் வளரும் குழந்தைக்கும் நல்லது என்பார்கள்! பிரசவம் நெருங்கும் சமயம் அவளுக்கு வளைகாப்பு செய்வார்கள். உறவினர், தோழிகள் சூழ, மருதாணி இட்டு, தலையிலே பூச்சூட்டி, அழகு செய்து மனையிலே

அமரவைத்து, கைநிறைய வளையல்கள் அணிவித்துவிடு வார்கள். அந்த வளையோசையை, அவள் வயிற்றில் வளரும் குழந்தை கேட்டு மகிழுமாம்! தாய்மை அடைந்த பெண் இதனால் மகிழ்ச்சி அடைந்து சுகமாக குழந்தையைப் பெற்றெடுப்பாள் என்பதற்காகத்தான் இந்த வளைகாப்பு சடங்கு நடத்துகிறார்கள்.

குத்துவிளக்கின் விளக்கம்?

குத்துவிளக்கை திருமணமாகி கணவன் வீட்டுக்குச் செல்லும் பெண்களுக்கு தாய்வீட்டு சீதனமாக கொடுத்தனுப்பு வார்கள். இதன் பொருள், குத்துவிளக்கிற்கு 5 முகங்கள் உண்டு! அவை அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோஜித புத்தி, சகிப்புத்தன்மை என்பதாகும். இவை ஐந்தும் பெண்களுக்கு அவசியம் என்பதை எடுத்துக்காட்ட, தினமும் பெண்களை குத்துவிளக்கை ஏற்றி வைக்கச் சொன்னார்கள்.

கோலமிடுவது எதற்காக?

புள்ளிகளை இணைத்துப் போடுவதுதான் கோலம்! வாசலில் மாட்டுச்சாணம் தெளித்து கோலமிடுவார்கள். சாணம் தெளிப்பதால், வீட்டிற்குள் விஷப்பூச்சி அண்டாது! கோலம் போடுவதன் முக்கிய நோக்கம், எறும்பு போன்ற ஜீவன்களுக்கு அது உணவாகிறது! எனவே, அரிசிமாவில்தான் கோலம் போட வேண்டும். பண்டிகை, விசேஷ நாட்களில் வண்ணப்பொடி கோலமிடலாம்.

ஆலயங்களில் மொட்டை அடிப்பதேன்?

பிரார்த்தனைகளை நிறைவேற்ற கோவில்களுக்குச் சென்று, ஆண்டவனுக்கு முடியிறக்கி மொட்டை அடித்துக் கொள்கிறார்கள். முடியிறக்குவதால் ஆண்டவனுக்கு என்ன பயன்? அதனால் மனிதனுடைய ஆணவம் குறைகிறதாம்.

தலைமுடி இறக்குவதால், அவனுடைய அழகு குறைகிறது அழகு குறைவதால் அவன் ஆணவம் அழிகிறது! ஆணவ அகலுவதால் அருள் கிடைக்கிறது. அருள் கிடைப்பதா பிரார்த்தனை நிறைவேறுகிறது என்கிறார்கள்.

அறுபதாம் கல்யாணம் ஏன்?

அகவை அறுபதில், அறுபதாம் கல்யாணம் செய்வது என்றும், அதை சஷ்டியப்த பூர்த்தி என்றும் சொல்வார்கள் 60 வயதை முடித்து, 61-ல் காலெடுத்து வைக்கும் ஒருவருக்கு இதைச் செய்வார்கள். அவர் பிறக்கும்போது, ஜாதகத்தில் நவக்கிரகங்கள் எந்த நிலையில் இருந்தனவோ, அதே இடத்தில் அவரின் 61-ம் வயதின் ஜென்ம நட்சத்திரத்தின்போது, மறுபடியும் அமைந்திருக்கும்! எனவே, இதை ஆயுளின் ஒரு பாகம் முடிந்து, மறுபாகம் ஆரம்பித்திருப்பதாக எண்ணப்படு கிறது! அவர் புதிதாகப் பிறந்ததுபோல் ஏற்று, அந்த நிகழ்ச்சியைக் கொண்டாடி, அதே தம்பதிகளுக்கு மறுபடியும் திருமணம் செய்து வைப்பார்கள்.

மாங்கல்யத்தில் ஒன்பது நூலிழைகள் இருப்பது ஏன்?

வாழ்க்கை, மேன்மை, ஆற்றல், தூய்மை, பக்தி, நல்ல குணம், அறிவு, அடக்கம், சேவை இந்த 9 குணங்களும் ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தத்தான் மஞ்சள் பூசிய ஒன்பது நூலிழைகளில் மாங்கல்யத்தைக் கோர்த்து, மணமகள் கழுத்தில் கட்டுகிறார்கள்.

பிள்ளையார் சுழி போடுவது ஏன்?

சிலர் எழுத ஆரம்பிக்கும்போது பிள்ளையார் சுழி போட்டுத்தான் எழுதத் துவங்குவார்கள். ஏனென்றால்,

வேதங்கள், வால்மீகி இராமாயணம் போன்றவைகள் எழுத்தால் எழுதப்படவில்லை. ஒருவர் சொல்ல, மற்றவர்களால் செவி வழியே கேட்கப்பட்டதாம்! மகாபாரத காலத்திலேதான் முதல் நூல் எழுத்து வடிவில் தோன்றியது! அந்த நூல், வியாசர் பாரதம்! வியாசர் அந்த சுலோகங்களை வாயால் சொல்லச் சொல்ல, அதை எழுதியவர் பிள்ளையார் என்பார்கள்! அவர் தன் இடது பக்கத் தந்தத்தை ஒடித்து எழுதுகோலாக்கி எழுதினார்! (அதனால்தான் பிள்ளையாருக்கு இடதுபக்கத் தந்தப் பல் உடைந்து காணப்படுகிறது). எழுத்திலே முதல் நூலை பொறித்தவர் பிள்ளையார் என்பதால், அவருக்கு மரியாதை செலுத்தும்வண்ணம் பிள்ளையார் சுழியைப் போட்டு, எழுதத் துவங்குகிறார்கள்!

சாப்பிட்ட இலைக்கு சாஸ்திரம் ஏன்?

வீட்டுக்கு வந்த விருந்தாளிகளுக்கு வாழை இலை போட்டு பறிமாறுகிறோம். விருந்தாளிகள் சாப்பிட்டபின், அதை மடக்குவது எப்படி என்று தெரியாமல் அக்கம், பக்கம் பார்க்கிறார்கள். காரணம், அதற்கும் சாஸ்திரம் உண்டு! இலையை மேலிருந்து கீழாக உள்பக்கம் மடக்கினால், அந்த வீட்டு உறவு என்றும் தொடர்ந்திருக்குமென்றும், கீழிருந்து மேலாக வெளிப் பக்கம் மடக்கினால், அந்த உறவு விட்டுப்போகும் என்றும் சொல்லுவார்கள். நல்ல காரியம் செய்யும் வீட்டுக்குச் செல்பவர்கள் இலையை கீழ்நோக்கி மடக்கினால், ''உங்கள் வீட்டில் என்றும் நல்லதே நடக்கும்!'' என்றும், துயரக் காரியம் செய்யும் வீட்டிற்குச் செல்பவர்கள் இலையை மேல்நோக்கி மடக்கினால், ''இதைப்போன்ற துயர சம்பவம் இனி உங்கள் வீட்டில் நடக்கக்கூடாது'' என்றும் நினைப்பதாகப் பொருள் கொள்வார்கள்.

இலையைப் பற்றி இனியொன்று!

படையலுக்கோ, பறிமாறுவதற்கோ தலைவாழை இலையைப் போடும்போது, அதன் தலைப்பகுதி எந்தப் பக்கம் இருக்கவேண்டுமென்று பலர் தெரியாமல் தடுமாறுவார்கள். இலையின் விரிந்த பகுதி சாப்பிட அமர்ந்திருப்பவர்களுக்கு வலக்கைப் பக்கமாகவும், குறுகிய பகுதி இடக்கைப் பக்க மாகவும் இருக்க வேண்டுமென்று சாஸ்திரம் தெரிந்தவர்கள் சொல்லுவார்கள். சாஸ்திரம் எதற்காக இதைச் சொல்லி இருந்தாலும், சாப்பிடுபவர்களுக்கு இதுதான் வசதி! பறிமாறப் படும் கூட்டு, பொறியல், வருவல், அப்பளம் போன்றவைகள் இலையின் வலதுபக்கம் அகண்ட பகுதியில் இருந்தால், எடுத்துச் சாப்பிடுவதற்கு, கை வசதியாக செயல்படும்! உப்பு, ஊறுகாய் போன்றவைகள் அரிதாகத் தொட்டுக்கொள்வதால், இடதுபக்கம் பரிமாறலாம்! இதை பரிமாறுபவர்களும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

இனியும் ஒன்று!

சிலர் இலையில் சாப்பிட உட்கார்ந்ததும், இலையைச் சுற்றி தண்ணீர் விடுவார்கள். இதற்கென்ன காரணம் என்று கேட்டால்? கண்ணுக்குத் தெரியாத சில கிருமிகள் ஊர்ந்து வந்து, சாப்பாட்டில் கலந்துவிடாதபடி, நீரில் மிதந்து நின்று விடும்! அதனால், கிருமிகள் அண்டாத உணவு நமக்குக் கிடைக்கும் என்பார்கள்.

கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்:

ஒரு துறையில் சிறந்து விளங்கியவர்களின் சம்மந்தப் பட்டவர்கள், அதே துறையில் சிறப்புப்பெற்றால், "கம்பன்

வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்!'' என்பார்கள். கம்பன் கவிகளைக் கேட்டுக் கேட்டு அவர் நடமாடிய இடத்திற்கும், புழங்கிய பொருளுக்கும்கூட கவித்திறன் வந்துவிடும் என்பதைத் தான் இப்படிச் சொன்னார்கள். கம்பன் எழுதிய கவிதைகள் அவர் வீடு முழுக்கச் சிதறிக் கிடக்கும் என்பதால், ''கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்'' என்றார்கள்.

கையும், காலுமே மூலதனம்:

நம் உடல் உறுப்புகள் உறுதியாய் இருந்தால், அதையே மூலதனமாக வைத்து சம்பாதிக்கலாம். ஒருமுறை அறிஞர் டால்ஸ்டாயை ஒரு இளைஞன் சந்தித்து, தான் உழைத்துப் பிழைக்க மூலதனம் வேண்டும் என்று கேட்டான்.

''உனக்கு நான் 10,000 ரூபிள் தருகிறேன். அதற்குப் பதிலாக நீ எனக்கு, உன் சுண்டுவிரலையும், உன் ஒரு காலையும், உன்னுடைய கண்ணில் ஒன்றையும் தரவேண்டும்'' என்றார்.

''என்ன? பத்தாயிரம் ரூபிளுக்கு என்னுடைய சுண்டு விரலையும், ஒரு காலையும், ஒரு கண்ணையும் தரவேண்டுமா?'' என்றான்.

''சரி, எவ்வளவு கேட்கிறாய்?'' என்றார் டால்ஸ்டாய்.

''நீங்கள் எவ்வளவு தந்தாலும் கொடுக்க மாட்டேன்'' என்றெழுந்தான் இளைஞன்.

டால்ஸ்டாய் சிரித்துக்கொண்டே, ''நில் இளைஞனே! பார்த்தாயா, உன்னிடமே விலைமதிக்க முடியாத உடல் உறுப்புக்கள் இருக்கிறது! இதையே மூலதனமாக்கி உழைத்தால் நீ வளமடையலாம்'' என்றார் டால்ஸ்டாய்.

புலி வால் பிடித்த நாயர்:

இது கேரளத்தில் அடிக்கடி சொல்லும் வார்த்தை! தமிழ்நாட்டிலும் இது புழக்கத்தில் இருக்கிறது!

ஒருவர் முன்பின் யோசிக்காமல் ஒன்றை செய்துவிட்டு, பின் மாட்டிக்கொண்டு விழித்தால், "புலி வால் பிடித்த கதையாகி விட்டது" என்று சொல்வார்கள். ஒரு நாயர் காட்டு வழியே சென்றுகொண்டிருந்தார். ஓரிடத்தில் புலியொன்று அவர் கண்களுக்கு எதிர்திசையை நோக்கி படுத்துக்கொண்டிருந்தது! அதைத் தாண்டி போவதற்கு அவருக்குப் பயம். அதன் பின்புறமாக இருந்து, அதன் வாலைப் பிடித்துக்கொண்டால், நம்மீது எப்படிப் பாயும் என்று அதன் வாலைப் பிடித்தார். புலி உறுமிக்கொண்டு எழுந்தது! நாயர் மேல் பாய முயற்சித்தது! ஆனால், அவர் பின்னால் வாலைப் பிடித்துக் கொண்டிருந்ததால், பாய முடியவில்லை. புலி சுற்றிச்சுற்றி வந்தது! வாலை பிடித்தபடி விடாமல் அவரும் சுற்றினார். நாயரின் நிலை பரிதாபமாயிற்று! புலி வாலை விட்டால் அது நம்மைக் கடித்துக்கொன்று விடும். விடாமல் இருந்தால் எத்தனை நேரம் சுற்றிக் கொண்டிருக்க முடியும்? வாலைப் பிடிக்காமல் வந்த வழியே திரும்பி போயிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டார். இதைத்தான் "புலி வால் பிடித்த நாயர்" என்று சொன்னார்கள்.

காகிதத்தை மடிக்காமல் நேராக கிழிக்க முடிவதில்லை. ஏன்?

காகிதம் பல இழைகளால் ஆனது. அது ஒருவித பசை சேர்த்து ஒட்டப்படுகிறது! அதை மடிக்காமல் கிழிக்கும்போது, பசைத்திறன் குறைந்துள்ள இடங்களில் தாறுமாறாக கிழிகிறது. காகிதத்தை மடித்து கிழிக்கும்போது, அதன் மடிப்புப் பகுதியில் இழைகள் அறுபட்டு, அது நேராகக் கிழிகிறது!

அட்டை கடிப்பதை நாம் அறிவதில்லை ஏன்?

அட்டை நம் உடம்பில் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் போது, நாம் அதை உணருவதில்லை! காரணம்? அதன் வாயில் ஊறும் ஒருவித திரவத்தில் உள்ள ரசாயனப் பொருள், அது கடிக்கும் இடத்தை மரத்துப்போக வைக்கிறது! அதனால் அது கடிப்பது நமக்குத் தெரிவதில்லை. அந்தப் பகுதியிலிருந்து இரத்தம் வழிவதைப் பார்க்கும்போதுதான் அட்டை நம்மைக் கடிப்பது தெரிகிறது.

எறும்புகளின் வரிசை:

எறும்புகள் சாரி சாரியாக பட்டாளத்து வீரர்கள்போல் படை வகுத்துச் செல்லும் காட்சி நம்மை பிரமிக்கச் செய்யும்! இது அதன் ஒழுக்கத்தையும், சுறுசுறுப்பையும் காட்டுவதுபோல் தெரிந்தாலும், உண்மை என்ன?

எறும்புகளுக்கு கண் பார்வை குறைவு! எனவே, அது அடுத்த எறும்பின் உடம்பில் சுரக்கும் அமிலத்தின் வாசனையைப் பிடித்துக்கொண்டே, ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லுகிறது என்பதுதான் உண்மை.

மூன்று ஆசைகள் எது?

ஆசைகள் மூன்று! அது மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பது. உலகின் எல்லா பிரச்சனைகளும் இதன் அடிப்படையிலேதான் நடைபெறுகிறது. இந்த மூன்று ஆசைகளின் விளைவுகளைச் சொல்வதுதான் மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம்.

மண்ணாசையால் விளைந்தது - **மகாபாரதம்.**
பெண்ணாசையால் விளைந்தது - **இராமாயணம்.**
பொன்னாசையால் விளைந்தது - **சிலப்பதிகாரம்.**

இந்த மூன்று ஆசைகளையும் விளக்க, தனித்தனியாக எழுதப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்புதானே?

க்விஸ் என்ற வார்த்தை வந்தது எப்படி?

டாலி என்பவரிடம் ஒரு புது வார்த்தையை கண்டுபிடித்து, அதை சீக்கிரமாக பிரபலம் அடையச் செய்ய வேண்டும் என்று அவரின் நண்பர்கள் சவால் விட்டார்களாம். டாலி, கொஞ்சம் யோசித்து 'க்விஸ்' என்ற வார்த்தையை உருவாக்கினார். அதற்கு என்ன பொருள் என்று அவருக்கே தெரியாது! ஆனாலும், இரவோடு, இரவாக அதை ஊர் முழுவதும் சுவற்றில் எழுதி வைத்தார். மறுநாள் இதைப் படித்து மக்கள் இது 'என்ன?' 'ஏது?' என்று தெரியாமல் குழம்பினார்கள்! 'என்ன இது க்விஸ்...? எதற்காக இப்படி எழுதி வைத்திருக்கிறார்கள்' என்று விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஒருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை! அது யாருக்கும் புரியாத புதிராகவே இருந்தது! அந்த வார்த்தையே பிறகு, புரியாத புதிர்களுக்கெல்லாம் 'க்விஸ்' என்ற பெயராகி, பிரபலம் அடைந்துவிட்டது!

விமானத்தில் கறுப்புப் பெட்டி ஏன்?

ஆயிரக்கணக்கான அடி உயரத்திலே பறந்து கொண்டிருக்கும் விமானம் 'திடீரென' விபத்துக்குள்ளானால், கடலிலோ, தரையிலோ விழுந்து உருத்தெரியாமல் நொறுங்கி விடுகிறது! அதில் பிரயாணம் செய்தவர்கள் உயரத்திலே இருந்து விழுந்ததாலும், உடனே விமானம் தீ பிடித்து விடுவதாலும் உயிர் பிழைப்பதில்லை! விபத்து எப்படி நடந்தது என்று காரணம் தெரிவதற்கு வழி இல்லாமல் போய்விடுகிறது.

இதற்காகவே கறுப்புப் பெட்டியை கண்டுபிடித்தார்கள். கறுப்புப் பெட்டி எத்தகைய விபத்திலேயும் சேதமடையாமல் உறுதியாக இருக்கும். அது தீ பிடிக்காத, எந்த அதிர்ச்சியும்

தாக்காத அளவில் தயாரிக்கப்படுகிறது! அதற்குள் பொருத்தியுள்ள எலக்ட்ரானிக் சாதனங்கள் பறந்து கொண்டிருக்கும் விமானத்தின் வேகம், தரையில் உள்ள விமான நிலையங்களில் கொண்ட தகவல்கள், விமான ஓட்டிகளின் பேச்சு இவைகளை அவ்வப் போது பதிவு செய்து பத்திரமாய் வைத்துக்கொள்ளும். எனவே விபத்து நடந்த இடத்தில் கறுப்புப் பெட்டியைத் தேடிக் கண்டு பிடித்து, கம்ப்யூட்டர் மூலம் விபரம் தெரிந்து கொள்ள முடிகிறது.

கல்லினுள் தேரை வந்தது எப்படி?

பாறையின் இடுக்குகளில் மழை நீர் தேங்கி நிற்கும். அந்த நீரில் தேரை போன்ற உயிரினங்கள் உற்பத்தியாகி வாழும். நாளடைவில் பாறை இடுக்குகள் மூடிவிடும்! அதனுள் இருக்கும் 'தேரை' அங்கேயே தங்கி உயிர் வாழும்! பாறைக்குள் உள்ள தேரைக்கு எப்படி உணவு கிடைக்கிறது என்றால், அது தூங்கும்போது அதன் உடலில் உள்ள செல்களில் உண்டாகும் இரசாயன மாற்றங்கள் அதற்குத் தேவையான சக்தியை உருவாக்கிக் கொடுப்பதால், அது உணவே உண்ணாமல் உயிர் வாழும் சக்தியைப் பெறுகிறது! சிலை வடிப்பதற்காக சிற்பிகள் தேர்வு செய்யும் பாறைகளை, உளியால் தட்டிப் பார்த்தே அதனுள் தேரை இருப்பதை தெரிந்து கொள்வார்கள். தேரை உள்ள பாறை உறுதியற்றவை என்பதால், சிற்பங்கள் செதுக்க அது பயனற்றது என்று ஒதுக்கிவிடுவார்கள். உளியில் வரும் ஓசையைக் கொண்டே, உள்ளே தேரை இருப்பதை சிற்பிகள் தெரிந்துகொள்வது அற்புதம்தானே?

ஆறறிவை அறிவோம்:

மரம், செடி, கொடிகள் உடல் ஒன்றால் மட்டும் உணர்கிறது. அதனால் அதற்கு ஓரறிவு! தண்ணீரில் வாழும்

உயிரினங்கள் உடலாலும், நாக்காலும் உணர்வதால் அதற்கு ஈரறிவு! ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் உடல், நாக்கு, மூக்கு இவைகளால் உணர்வதால் அவைகளுக்கு மூன்றறிவு! பூச்சி இனங்கள் உடல், நாக்கு, மூக்கு, கண் இவைகளால் உணர்ந்து கொள்வதால் அவைகளுக்கு நான்கறிவு! உடல், நாக்கு, மூக்கு, கண், காதால் உணர்வதால் விலங்கினங்களுக்கு ஐந்தறிவு! ஆறறிவு உள்ளவன் மனிதன் மட்டும்தான்! அவை உடல், நாக்கு, மூக்கு, கண், காது, மூளை! ஆறாவது அறிவான மூளையை உபயோகித்து எதையும் பகுத்தறிந்து, ஆராய்ந்து பார்க்கும் திறன் மனிதனுக்கு மட்டுமே உண்டு!

முத்து எப்படித் தோன்றுகிறது?

சிப்பிக்குள் இருந்தே முத்து கிடைக்கிறது! சிப்பிகளின் ஓடு இரு பகுதியாக இருக்கும். அந்த இரு பகுதிகளில், ஒரு பக்கம் மட்டும் இணைந்திருக்கும். அந்த ஓடுகள் பெரும்பாலும் திறந்தே இருக்கும். அதற்குள் மணல் போன்ற சிறிய பொருள் புகுந்து விடும். சிப்பி அதைச் சுற்றி, அடுக்கடுக்காக சுவர் எழுப்பும். அது உருண்டை வடிவமாகிறது. அதுவே முத்து!

பெண்களின் பருவங்கள் எட்டு!

வேறு எந்த மொழியிலும் காணப்படாத சிறப்பு, தமிழ் மொழிக்கு உண்டு! அது செம்மொழி என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள்! இதோ, பெண்களின் ஒவ்வொரு பருவத்தையும் எட்டாகப் பிரித்துள்ள சிறப்பு!

7 வயது வரை - பேதை
8 முதல் 11 வயது வரை - பெதும்பை
12 வயது முதல் 13 வயது வரை - மங்கை
14 வயது முதல் 19 வயது வரை - மடந்தை

20 வயது முதல் 25 வயது வரை - அரிவை
26 வயது முதல் 31 வயது வரை - தெரிவை
32 வயது முதல் 55 வயது வரை - பேரிளம்
56 வயது முதல் இறுதி வரை - விருத்தை

இந்தச் சிறப்பு வேறு எந்த மொழியிலும் இல்லை! எனவேதான் தமிழ்மொழி செம்மொழி ஆனது!

''டீன்–ஏஜ்'' என்ற சொல் எப்படி வந்தது?

13 முதல் 19 வரையிலான எண்களை ஆங்கிலத்தில் தர்ட்டீன், போர்ட்டீன்... என்று நைன்டீன் வரை சொல்கிறோம். அதன் இறுதியில் ''டீன்'' என்பதில் முடிகிறது. எனவே, 13 முதல் 19 வயதுடையவர்களை ''டீன் - ஏஜ்'' என்று சொன்னார்கள். டீன்-ஏஜ் என்பது 13 முதல் 19 வயது உடையவர்களைக் குறிக்கிறது! அதேபோல் தமிழில் ''பதின் வயது'' என்று சொல்வார்கள். பதிமூன்று என ஆரம்பித்து பத்தொன்பது வரை உள்ள எண்களை தமிழில் உச்சரிக்கும்போது, பதிமூன்று, பதினான்கு... என்று 'பதின்' என்பதில்தான் துவங்குகிறது. எனவே 'பதின் வயது' என்று சொல்வார்கள். வளர் இளம்பருவம் என்பது 13 முதல் 19 வயது வரை என்பதால் இப்படிச் சொல்கிறார்கள்.

எடுக்கட்டுமா, கோக்கட்டுமா?

மகாபாரதக்கதையில் வரும் ஒரு காட்சி! துரியோதனுக்காக அவன் அரண்மனையில் கர்ணன் காத்துக் கொண்டிருந்தான். வெகுநேரமாகியும் துரியோதனன் வராததால், அவன் மனைவி பானுமதி ''அவர் வரும்வரை நாம் சொக்கட்டான் விளையாடலாமா?'' என்று கேட்க, கர்ணன் சம்மதித்தான். இருவரும் எதிரும், புதிருமாக அமர்ந்து விளையாடினார்கள்.

சற்று நேரத்தில் துரியோதனன் வர, அதைப் பார்த்த பானுமதி மரியாதைக்காக எழுந்தாள். துரியோதனன் வந்ததை ஆட்ட சுவாரசியத்தில் கவனிக்காத கர்ணன், பானுமதி தோற்றுவிடும் பயத்தில்தான் எழுந்திரிக்கிறாள் என்று நினைத்து, ''இரு, இரு'' என்று அவள் இடையில் அணிந்திருந்த மேகலையை பிடித்து இழுக்க, அது அறுந்து, அதில் கோர்த்திருந்த மணிகளெல்லாம் தரையில் சிதறியது!

துரியோதனன் அங்கு வந்து நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து கர்ணன் திகைத்தான். இருவரும் தங்களைத் தவறாக புரிந்து கொள்வாரோ? என்று வருந்தினர். ஆனால், துரியோதனன் எதையும் கண்டுகொள்ளால், தரையில் சிந்திக்கிடந்த முத்துக்களை ''எடுக்கட்டுமா, கோக்கட்டுமா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான். இதன் உண்மைப் பொருள் கோபமோ, ஆத்திரமோ வருபவர்களுக்கு கை, கால்கள் நடுங்கும். ஆனால், துரியோதனனுக்கு அப்படியொன்றும் நடக்கவில்லை. இயல் பாகவே இருந்தான். 'எனக்கு கோபமுமில்லை, ஆத்திரமு மில்லை, அப்படியிருந்தால் கை, கால்கள் நடுங்கும். நான் மணியைக் கோக்க முடியாது. நான் சாதாரணமாகவே இருக்கிறேன்' என்று குறிப்பால் உணர்த்த, ''எடுக்கட்டுமா, கோக்கட்டுமா?'' என்று கேட்டான். நண்பன் மீதும், மனைவியின் மீதும் அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தான் என்பதை குறிப்பதற்காகவே இந்த நிகழ்ச்சி!

மகிழ்ச்சியும், மனநிறைவும் கிடைப்பது எதனால்?

மனநிறைவு இருந்தால் மகிழ்ச்சி கிடைக்கும்! சந்தோஷமும், நிம்மதியும் பணத்தால் மட்டும் கிடைப்பதில்லை! நம் மனதால் கிடைப்பதுதான் அது! ஒரு கதை உண்டு!

ஒருவன் ஹாயாக படுத்திருந்தான். அவன் நண்பன் வந்து, ''ஏம்பா நாங்கெல்லாம் பகலும், இரவுமா ஒழைச்சு சம்பாதிக் கிறதிலேயே கண்ணா இருக்கோம். நீ இப்படி ஆனந்தமா படுத்துக் காலாட்டிக்கிட்டு இருக்கையே'' என்று கேட்டான்.

''இரவும், பகலுமா உழைச்சா என்ன கிடைக்கும்?'' என்றான் அந்த 'ஹாயான' மனிதன்.

''பணம்'' என்றான் நண்பன்.

''பணம் கெடைச்சா?'' என்றான் இவன்.

''சொத்து, சுகம், வீடு, வாசல் எல்லாம் அனுபவிக்கலாம்'' என்றான் நண்பன்.

''இப்ப நான் சம்பாதிச்சுக்கிட்டிருக்கிற பணத்திலையே அதைத்தானே அனுபவிச்சுக்கிட்டிருக்கிறேன். பணம் சம்பாதிக் கிறதே குறிக்கோளா இருந்தா, மயில் ஆடறதையும், குயில் கூவறதையும், குழந்தை சிரிக்கிறதையும், சூரியன் உதிக்கிறதையும் பார்க்க வேண்டாமா? மேலே மேலே சம்பாதிச்சுக்கிட்டிருந்தா இந்த சந்தோஷத்தை யார் வந்து அனுபவிக்கறது? நிம்மதியா இருக்கத்தானே சம்பாதிக்கிறோம். அந்த நிம்மதியை வித்துட்டு எதுக்காக சம்பாதிக்கணும்? யாருக்காக சம்பாதிக்கணும்? வாழ்க்கையிலே உழைப்பும், ஓய்வும், தூக்கமும் சரியா இருக்கணும். அதுதான் 'வாழ்க்கை' என்றான் காலாட்டி.

வாழ்க்கைப் படி எட்டு எது?

ஒவ்வொரு எட்டிற்கும், ஒவ்வொரு வளர்ச்சியை எட்டிப் பிடிக்கத்தான் வாழ்க்கையை எட்டாகப் பிரித்தார்கள். அது,

ஓரெட்டில் வளராகாத பிள்ளையும்;
ஈரெட்டில் கற்காத கல்வியும்;
மூவெட்டில் முடியாத திருமணமும்;
நாலெட்டில் பெறாத பிள்ளையும்;
ஐயெட்டில் சேர்க்காத செல்வமும்;
ஆறெட்டில் தேடாத புகழும்;
ஏழெட்டில் சுற்றாத தேசமும்;
எட்டெட்டில் கிடைக்காத ஓய்வும் பயனற்றது.

உரிய காலத்தில் உரியதைப் பெறுவதுதான் சிறப்பு! சரியான நேரத்தில், சரியாக செயல்படாவிட்டால், இந்த எட்டும் நமக்கு எட்டாக் கனியாகி விடும்!

மாணிக்கம் எங்கு கிடைக்கிறது?

மாணிக்கம் - நல்ல பாம்பு வயதானால், அதுவரை அது யாரையும் கடித்து விஷத்தை இறக்காமல் இருந்தால், அது இறுகி மாணிக்கமாகிறது என்பதோ, அமாவாசையன்று அதைக் கக்கிவைத்துவிட்டு, அந்த வெளிச்சத்தில் பாம்பு இரை தேடுகிறது என்றோ சொல்லுவதெல்லாம் பொய்! மாணிக்கம் பெரும்பாலும் ஆற்றுப்படுகையில்தான் கிடைக்கிறது!

தாலாட்டு!

தால் பிளஸ் ஆட்டு என்பதுதான் தாலாட்டு! தால் என்றால் நாக்கு, நாவினை ஆட்டி, குரவை இட்டு, தாய் இசைக்கும் பாடலைத் தாலாட்டு என்கிறோம். தாய் தாலாட்டுப் பாட குழந்தை தன்னை மறந்து தூங்குகிறது! இலக்கணம் என்னவென்றே தெரியாத தாயின் வாயிலிருந்து, எதுகை, மோனையோடு பாமரர்களும் புரியும்வண்ணம் வந்து விழும் சொல் வளமும், கவிதை நயமும் கொண்டதுதான் தாலாட்டு!

ரூபாய் நோட்டு மதிக்கப்படுவதேன்?

ஒரு பொருள் எவ்வளவு மதிப்புள்ளதாக இருந்தாலும், அதன் மதிப்புக்கு காகிதத்தில் அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டைக் கொடுத்து பொருளை வாங்குகிறார்கள். வெறும் தாளிலே அச்சிடப்பட்ட நோட்டுக்கு இந்த மதிப்பு எப்படி வந்தது? நோட்டுகளை அரசுதான் அச்சிட்டு வழங்குகிறது! அதன் மதிப்புக்குரிய தங்கத்தை அரசு தன் கஜானாவில் வைத்திருக்கும். அரசிடமிருந்து எப்போது வேண்டுமானாலும் தங்கத்தை பெற்றுக்கொள்ளலாம். இதற்கு உறுதி அளித்துத்தான் அந்த நோட்டில் "GUARANTEED BY CENTRAL GOVERNMENT" என்றும், "I PROMISE TO PAY THE BEARER THE SUM OF......... RUPEES" என்றும் அந்த நோட்டில் குறிப்பிட்டுள்ள தொகையின் கீழ் ரிசர்வ் பேங்க் கவர்னர் கையொப்பம் இருக்கும். அரசின் கேரண்டியால்தான் அந்த கரன்சி மதிப்பு பெறுகிறது!

''ஓ.கே.'' என்ற வார்த்தை எப்படி வந்தது?

யார் எதைச் சொன்னாலும் அது சரியாக இருந்தால் முதலில் சொல்லுவது 'ஓ.கே.' என்ற வார்த்தையைத்தான். இந்த வார்த்தையைத்தான் உலகில் பெரும்பாலோர் உபயோகிக் கிறார்கள். இந்த ஓ.கே. என்ற சொல் எதிலிருந்து வந்தது? எல்லாம் சரி என்பதை ஆங்கிலத்தில் 'ஆல் கரெக்ட்' (All correct) என்று சொல்வார்கள். ஆனால், அமெரிக்கர்கள் இதை 'ஓல் கொரெக்ட்' (Oll korrect) என்றுதான் உச்சரித்தார்கள். அந்த Oll என்பதிலுள்ள O-வும், Korrect என்பதிலுள்ள K-வும்தான் "O.K" என்றாயிற்று.

அமுக்கான் என்பது என்ன?

சிலருக்கு தூங்கும்போது, ஏதோ ஒன்று தன்மீது அமர்ந்து, தன்னை அமுக்குவது போல் இருக்கும். கை, கால்களை அசைக்க முடியாமல் திணறுவார்கள். இது பிரமைதான்! நம்முடைய உணர்வுகள் சில நேரங்களில் சீக்கிரமே எழுந்துவிடும். அப்போது நம் உடலை கட்டுப்படுத்தும் சக்தி தாமதமாக விழித்தால், இதுபோன்ற நிலை ஏற்படும். நம் உணர்வுகளும், உடலைக் கட்டுப்படுத்தும் அந்த சக்தியும் ஒரே நேரத்தில் விழித்துக் கொண்டால், இது ஏற்படாது! ஆக இது வெறும் பிரமைதான்.

சம்பளம் என்ற சொல் எப்படி வந்தது?

இப்போது வேலை செய்வோருக்குக் கூலியாக பணத்தைக் கொடுப்பதைப் போல், ஒரு காலத்தில் சம்பா நெல்லையும், அளம் என்ற உப்பையும் கொடுத்தார்கள், அதுவே சம்பா + அளம் = ''சம்பளம்'' என்றாகியது.

நோபல் பரிசு பிறந்தது எப்படி?

உலகிலேயே உயர்ந்த பரிசாக கருதப்படுகிறது நோபல் பரிசு! விஞ்ஞானம், உலக அமைதி, சமூகத்தொண்டு, மருத்துவம் கலைச்சேவை போன்றவற்றில் சாதனை செய்து, சிறந்து விளங்குபவர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது! இது யாரால் எப்படி ஏற்படுத்தப் பட்டதென்றால், 'ஆல்பர்ட் பென்ஹார்டு நோபல்' என்ற விஞ்ஞானி, தான் கண்டுபிடித்த 'டைனமைட்' பல உயிர்களை அழிக்கப் பயன்படுவதைப் பார்த்து வேதனைப்பட்டார். அழிவுக்குக் காரணமான கண்டுபிடிப்பை எண்ணி வருந்தினார். அதை ஈடுகட்ட, உலகில் சிறந்த கண்டுபிடிப்பாளர்களையும், சாதனையாளர் களையும் கவுரவிக்க எண்ணம் கொண்டார். தன் சொத்தில்

வரும் வருமானத்தைக் கொண்டு, தன் பெயரில் ஒரு விருதினை ஏற்படுத்தி, அதன் மூலம் வழங்க வேண்டுமென்று உயில் எழுதி வைத்தார். அதுவே நோபல் பரிசு!

காற்றின் வேகம் எவ்வளவு?

காற்றில் பல வகை காற்றை நாம் உணர்கிறோம். மென்காற்றிலிருந்து, சூறைக்காற்று வரை வீசுகிறது! காற்றின் வேகத்தைப் பொருத்து நாம் அதை வகைப்படுத்திச் சொல்லு கிறோம். அவை என்ன...?

★ மென்காற்றின் வேகம், மணிக்கு 5 கி.மீ. வரை.

★ இளம்தென்றல் காற்றின் வேகம், மணிக்கு 6 முதல் 11 கி.மீ. வரை.

★ தென்றல் காற்றின் வேகம், மணிக்கு 12 முதல் 19 கி.மீ. வரை.

★ புழுதிக் காற்றின் வேகம், மணிக்கு 20 முதல் 29 கி.மீ. வரை.

★ ஆடிக்காற்றின் வேகம், மணிக்கு 30 முதல் 39 வரை.

★ கடும் காற்றின் வேகம், 100 கி.மீ. வரை.

★ புயல்காற்றின் வேகம், 101 முதல் 120 கி.மீ.

★ சூறைக்காற்றின் வேகம், 12 கி.மீட்டருக்கு மேல்.

உறவின் பொருள் என்ன?

தம்பி - 'தம் + பின்'. அதாவது தனக்குப் பின் பிறந்தவன் என்பதுதான் 'தம்பி' என்றாயிற்று.

தங்கை - 'தம் + கை' என்பதே தங்கை என்ற சொல் ஆயிற்று. கை என்பது 'சிறிய' என்று பொருள் தருவது. கைக்குட்டை, கைக்குழந்தை என்று சிறிய துண்டையும்,

சிறிய குழந்தையையும் சொல்லுகிறோம் அல்லவா? அதைப் போல, தனக்கு இளையவள் என்பதுதான் தங்கை.

தமக்கை – 'தம் + அக்கை'. அக்கை என்பது 'மூத்தவள்', 'பெரியவள்' என்னும் பொருள்களைக் குறிக்கும். 'அக்காள்' என்றும் அழைக்கிறார்கள். தமக்கை என்றால் தனக்கு மூத்தவள் என்பதாகும்.

தமயன் – 'தம் + ஐயன்' என்பதே தமயன். ஐயன் என்றால் 'பெரியவன்', 'மூத்தவன்', 'உயர்ந்தவன்' என்பதாகும். தன் அண்ணனைக் குறிப்பதே 'தமயன்' என்பதாம்.

தந்தை – 'தம் + தை' என்பதே தந்தை. தை என்பது 'உண்டாக்கிய' 'பெற்ற' 'படைத்த' என்னும் பொருள் தரும். எனவே, தன்னைப் பெற்றவர் தந்தை என அழைக்கப்படுகிறார்.

இது டாக்டர். தி. முத்துக்கண்ணப்பன் அவர்கள் 'நல்ல தமிழ் அறிவோம்' என்னும் புத்தகத்தில் கொடுத்துள்ள விளக்கம்!

மேலும் ''அம்மா'' என்ற அமுதச் சொல்லுக்கு விளக்கம்... பசுவின் கன்று தாயை ''அம்மா'' என்றும், ஆட்டுக்குட்டி தன் தாயை அழைக்கும்போது ''அம்மே'' என்றுதான் கத்துகிறது! உதடுகள் பிரியும்போதே ''ம்மா...'' என்ற ஒலி வந்துவிடுகிறது. உலகில் பல மொழிகளில் தாயை அழைக்கும் போது, ''ம்மா...'' என்றுதான் ஆரம்பிக்கிறார்கள். ஆங்கிலத்தில் ''மதர்'' என்றும், வடமொழியில் ''மாதா'' என்றும் அழைக்கிறார்கள்... இந்த 'அம்மா' என்ற தமிழ்சொல் இயற்கையில் வந்தது!

''நியூஸ்'' என்பதன் விளக்கம் என்ன?

தமிழில் 'செய்தி' என்பதை ஆங்கிலத்தில் ''நியூஸ்'' என்கிறார்கள். "NEWS" என்ற வார்த்தை எப்படி வந்தது? North, East, West, South என்ற நான்கு ஆங்கில வார்த்தைகளின் முதல்

எழுத்துக்கள்தான் "NEWS" என்றாகியது! அதாவது நான்கு திசைகளிலிருந்தும் கிடைக்கும் செய்திகளைச் சேகரித்துச் சொல்லுவதால், அதற்கு "NEWS" என்ற பெயர் வந்திருக்கலாம்.

நாக்கில் சுவை அறியும் பாகங்கள் எவை?

நாம் உண்ணும் உணவின் சுவையை, நாக்கில் உள்ள சுவை உணரும் நரம்புகளே உணர்த்துகின்றன. நுனி நாக்கில் தித்திப்பும், உள்நாக்கில் கசப்பும், நாக்கின் வலது, இடது புறங்களில் புளிப்பும், பரவலாக உவர்ப்பும் அறியப்படுகிறது! இந்த அடிப்படை சுவை நான்கும் நாக்கின் நான்கு பாகங் களிலிருந்து உணரப்படுகிறது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்.

இந்த உலகம் இயற்கையால் உண்டானது! இது அனைவருக்கும் சொந்தம். இந்த பூமியை யாரும் தங்களுக்கென உரிமை கொண்டாடக் கூடாது! என் ஊர், என் நாடு, என் உலகம் என்று உரிமை கொண்டாடுவது தவறு! நிலமோ, தண்ணீரோ, வேறு இந்த பூமியில் தோன்றிய எந்தப் பொருளையும் தங்களுக்குச் சொந்தம் என்று உரிமைக் கொண்டாட முடியாது! மொழியால், மதத்தால், இனத்தால், நிறத்தால் நாம் மாறு பட்டிருந்தாலும் மனதால் நாம் அனைவரும் ஒன்றுதான் என்று நினைக்க வேண்டும். அதற்காகத்தான் ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்!'' என்றார்கள். கேளிர் என்றால் கேளுங்கள் என்று சிலர் பொருள் எடுத்துக் கொள்வார்கள். (கேளிர் என்பதற்கு உறவு, சொந்தம் என்று அர்த்தம்). யாதும் ஊரே என்றால், எல்லா ஊர்களும் எல்லோருக்கும் சொந்தமானது! யாவரும் கேளிர் என்பது உலகில் பிறந்த அனைவரும் உறவுகளே என்று பொருள்! உலகமே ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்ற நோக்கில் இதைச் சொன்னார்கள்!

தமிழ் மொழியின் தரம்:

''ரெயின் ரெயின் கோ அவெ'' என்று மழையைப் போ, போ என்று விரட்ட குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்! மழைக்காக காத்துக்கிடக்கும் விவசாய நாடு நம் நாடு! ''மழையே, மழையே வா! வா!'' என்று கற்றுக்கொடுக்க வேண்டிய குழந்தைகளுக்கு, ஆங்கிலத்தின் மோகத்தால், நம் நாட்டுக்குச் சரிபடாத செய்யுளைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். மேல்நாட்டுக்காரன் குளிர் வாட்டும் பிரதேசத்தில் வாழ்வதால், அவன் மழையைக் கண்டு அஞ்சுகிறான். ஆனால், நம் நிலை வேறு! இப்படி நமக்கு ஒவ்வாதவற்றை ஏற்றுக்கொண்டு, நம் பண்பாட்டை சீர்குலைக்கின்றனர். ''வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ, வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ'' என்று பாடினான் பாரதி! பெற்ற தாயை அம்மாவென்றழைக்காமல், 'மம்மி' என்றும், தந்தையை 'டாடி' என்றும் அழைக்கக் குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிறார்கள். ''மம்மி'' என்றால் ''பதப்படுத்தப்பட்ட பிணம்'' என்று பொருள்! அம்மாவை அப்படி அழைக்கலாமா? அதோடு, குழந்தை பேசத் தொடங்கும்போதே, அதற்கு முதலில் சொல்லிக் கொடுப்பது, 'டாடா' என்ற ஆங்கிலச் சொல்தான்! வந்தவர்களை அந்தக் குழந்தை, உடனே போகச் சொல்லி அனுப்புவதைப் போல் இருக்கும்! 'வணக்கம்' என்று வந்தவர்களை வரவேற்கச் சொல்லிக்கொடுக்கும் தமிழ் பண்பாட்டை மறந்து, போகச் சொல்லும் 'டாடா'வை ஏன் சொல்லிக் கொடுக்க வேண்டும்? அதற்காக ஆங்கிலம் அவசியமில்லை என்று சொல்லவில்லை! ஆங்கிலம் மட்டுமல்ல, ஜப்பான், சைனா, ரஷ்யா என்று எந்த மொழியை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளட்டும்! ஆனால், தாய்மொழித் தமிழைப் புறக்கணித்துவிட்டு, பிற மொழியின்மீது மோகம்

கொள்வது, ஒருவன் பெற்றதாயின் இதயத்தை வெட்டித் தன் காதலிக்கு பரிசளித்த கதையாகும்! எனவே, குறைந்தபட்சம், பெற்றவர்களையாவது 'அம்மா', 'அப்பா' என்றாவது அழைக்கக் கற்றுக்கொடுங்கள்!

ஜாதகம் சாதகமா?

ஜோதிடம் பார்ப்பது சரியா? தவறா? அது உண்மையா? பொய்யா? என்று வாதித்துக்கொண்டிருப்பதை விட, இந்தக் கணக்கு இப்போது பொய்யாகிறது என்பதுதான் இக்காலக் கண்டுபிடிப்பின் உண்மை! 9 கிரகங்களையும், 12 ராசிகளையும், 27 நட்சத்திரங்களையும் கொண்டு கணிக்கப்படுவதுதான் ஜாதகம். இதைப் பார்த்துத்தான் ஜோதிடர்கள் பலன் சொல்கிறார்கள்.

ஒரு ஜாதகன் பிறக்கும்போது சூரியன் எந்த ராசியில் இருக்கிறானோ அந்த ராசியின் சின்னத்தின் குணங்களைத்தான் அவன் பெறுகிறான் என்று சொல்லப்படுகிறது! ஒவ்வொரு ராசிக்கும் ஒவ்வொரு சின்னம் உண்டு! மேஷத்திற்கு ஆடு, ரிஷபத்திற்கு எருது என்பதைப்போல! இந்த 12 ராசிகளையும், 9 கிரகங்கள் சுற்றி வருகிறது! கிரகங்கள் அத்தனையும் ஒரே வேகத்தில் சுற்றுவதில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ராசியைக் கடப்பதற்கு ஒவ்வொரு வேகத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது. சூரியன் ஒரு ராசியிலிருந்து அடுத்த ராசிக்குச் செல்ல ஒரு மாதம் ஆகும். அது வழக்கமாக சுற்றி வரும், அதே வேகத்தில் சுற்றி வரும்போதுதான் ஒரு மாதம். ஆனால் இப்போது கிரகங்களின் வேகத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது! முந்தைய வேகமோ, சுறுசுறுப்போ இல்லை என்றும், ஒரு மாத காலம் பின்தங்கி இருப்பதாகவும், விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்துச் சொல்கிறார்கள். அப்படியானால், ஜாதகன் பிறந்த நேரத்தில், சூரியன்

சிம்மத்தில் இருப்பதாக ஜோதிடர்கள் கணக்குப்படி வந்தால், இப்போதைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பின்படி, அந்த நேரத்தில் சூரியன் அதற்கு முந்தைய ராசியான கடகத்தில் இருப்பான். அப்படி இருக்கும்போது இவர்கள் பழைய கணக்கு வைத்து சொல்லும் பலன் எப்பட்டி சரியாகும்? இது ஒருபுறமிருக்க, புதியதாக மூன்று கிரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அது, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ போன்றவை ஆகும்! இந்த கிரகங்கள் ராசிகளைச் சுற்றி வரும்போது, அதற்குண்டான பலனை எப்படிக் கணிப்பது?

முக்கியமாக ஒன்று, ஒரு குழந்தை பிறக்கும் அதே நேரத்தில், அதே வினாடியில் உலகில் குறைந்தபட்சம் ஏழு குழந்தைகள் பிறப்பதாக ஒரு கணிப்பு சொல்லுகிறது! ஒரே நேரத்தில் பிறந்தவர்களின் ஜாதகம் ஒரே மாதிரி இருக்க வேண்டும் அல்லவா? அப்படியானால், மகாத்மா காந்தி பிறந்த நேரத்தில் பிறந்த மற்ற ஆறு பேரும் மகாத்மாவாகத்தானே ஆகி இருக்க வேண்டும்.

இவைகளைக் கொண்டு ஜோதிடத்தைப் பற்றி முடிவு செய்வது நல்லது!

சொல்வதெல்லாம் உண்மை அல்ல!

நாம் உண்மைக்குப் புறம்பான சிலவற்றை நிஜம்போல் பேசுகிறோம். அது பல தலைமுறைகளாகப் பேசப்பட்டு வருவதனால், அந்தத் தவறுகள் நம்முடையதல்ல! அப்படியே கேட்டுப் பழகிப் போனதால், அதை நாமும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், அந்தத் தவறு என்ன என்று நாம் தெரிந்துகொள்வதிலே என்ன தவறு? பாருங்கள்!

கோழி கூவுது?

கோழி கூவாது. சேவல்தான் கூவும்! ஆனாலும் 'கோழி கூவுது' என்கிறோம். கோழி இனத்தில் சேவல் ஆண்! கோழி பெண்! விடிந்துவிட்டதை அறிவிக்கும் அலாரமாக சேவல்தான் செயல்படுகிறது.

மயிலாட...

மயில் தன் தோகை விரித்து அழகாக ஆடுகிறது! இதை பெண்களுக்கு உதாரணமாக பலர் சொல்கிறார்கள். ஆனால், ஆண் மயில்களுக்குத்தான் தோகை இருக்கிறது! ஆடுவது ஆண் மயில்தான். பெண் மயில் அல்ல! அதற்குத் தோகையும் இல்லை!

வாசப்படி இடிச்சிருச்சு!

வாசற்படி வந்தா இடித்தது? இவர்கள்தான் தடுமாறிப் போய் அதில் இடித்துக்கொள்கிறார்கள். 'முள் குத்தி விட்டது' என்கிறார்கள்! முள் தானாக வந்து குத்தவில்லை. அவர்கள்தான் அஜாக்கிரதையாக அதன்மீது காலை வைத்து நடக்க, அது கால்களில் குத்திக் கொள்ளுகிறது! வாசப்படியில் நான் இடித்துக் கொண்டேன். முள்ளின் மீது கால் வைத்துவிட்டேன் என்பதுதான் சரி!

ஊர் வரும்:

''பக்கத்து ஊருக்கு எப்படிப் போகணும்...?'' என்று ஒருவர் கேட்டால், ''வடக்கே போய், கிழக்கே திரும்பினால் ஊர் வரும்!'' என்பார்கள். ஊர் எப்படி வரும்? நாம்தான் அங்கே போக வேண்டும். ஆனால், ஊர் அதுவாக நகர்ந்து வருவதைப் போல் சொல்லுவார்கள்.

டால்டா!

சமையலுக்குப் பயன்படும் வெஜிடபிள் ஆயிலை 'டால்டா' என்றே சொல்கிறார்கள். காய்கறி எண்ணெயிலிருந்து தயாரித்த அதற்கு 'டால்டா' என்று வியாபாரப் பெயர் வைத்தது அதை தயாரித்த கம்பெனி. லக்ஸ், லைபாய் என்று சோப்புகளுக்குப் பெயர் வைத்ததைப் போலே, இந்த வெஜ். ஆயிலுக்கும் 'டால்டா' என்று பெயர் வைத்தார்கள். அது பிரபலம் அடைந்ததால், வெஜிடபிள் ஆயிலை, 'டால்டா' என்றே சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

கிருஷ்ணாயில்:

சிலர் மண்ணெண்ணெயை 'கிருஷ்ணாயில்' என்று சொல்வார்கள். ஆங்கிலத்தில் 'கெரோசின் ஆயில்' என்பதைத்தான் இவர்கள் 'கிருஷ்ணாயில்' என்று சொல்கிறார்கள்.

மைல் கல்:

கிலோ மீட்டரில், குறித்து வைத்திருக்கும் கல்லை, 'மைல்கல்' என்றுதான் சொல்கிறார்கள். தூரத்தின் அளவு, மைலிலிருந்து கிலோ மீட்டராக மாற்றிவிட்ட பிறகும், அதே பெயரில்தான் அழைக்கிறார்கள். 'இங்கிருந்து பொள்ளாச்சிக்கு எத்தனை மைல்?'' என்றுதான் கேட்கிறார்கள்.

நடு செண்டர்:

'நடுவில்' என்பது தமிழ் சொல்! அதே பொருள் கொண்டது தான் ஆங்கிலத்தில் 'செண்டர்' என்பது. ஆனால், பலர் 'நடு செண்டர்' என்று இரண்டையும் சேர்த்தே சொல்லுவார்கள். தமிழில் நடு என்றாலும், ஆங்கிலத்தில் செண்டர் என்றாலும் ஒரே பொருள்தான்! இரண்டையும் சேர்த்துச் சொல்வது தவறு.

போஸ்ட் கம்பம்:

''போஸ்ட் கம்பத்துக்குப் பக்கத்திலேதான் வீடு'' என்று சிலர் மின்கம்பத்தின் அடையாளம் வைத்துச் சொல்வார்கள். இது சரியல்ல! ''கம்பம்'' என்பதுதான் ஆங்கிலத்தில் ''போஸ்ட்'' என்று சொல்வது. இந்த இரண்டு வார்த்தையும் சேர்த்து ''போஸ்ட் கம்பம்'' என்று சொல்லுவது தவறு.

பாம்புப் புற்று:

பாம்புகள் புற்றொன்றும் கட்டுவதில்லை. கரையான் புற்றுக்குள்தான் பாம்பு குடி புகுந்துவிடுகிறது! கரையானை தின்ன வந்த பாம்பு, தனக்கு வசதியாக இருக்கிறது என்று அதை சொந்தமாக்கிக் கொள்ளுகிறது!

அணா, பைசா:

ஐம்பது பைசாவை 'எட்டணா' என்றும், இருபத்தைந்து பைசாவை 'நாலணா' என்றும் நிறைய பேர் சொல்லுகிறார்கள். அந்தக் காலத்தில், ஒரு ரூபாய்க்கு பதினாறணா, ஒரு அணாவுக்கு 12 சல்லிக்காசு என்றிருந்தது! நாணயத்தின் மதிப்பு பைசாவுக்கு மாறிய பிறகும், 'அணா' என்றே இப்போதும் பலர் சொல்கிறார்கள்.

பூமி வெளஞ்சிருக்கு!

பூமி விளைவதில்லை! அதில் நாம் விதைத்திருக்கும் விதைகள்தான், விளைந்து செழிக்கிறது!

சூரியன் உதிச்சிடுச்சு!

சூரியன் எங்கே உதிக்கிறான். அது இருந்த இடத்திலே தான் இருக்கிறது! பூமிதான், தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் சுற்றி வருகிறது! சூரியனின் ஒளிபடும் பூமியின் ஒரு பகுதி பகலாகவும், மறுபகுதி இரவாகவும் இருக்கிறது! இரவுப் பகுதி சூரியனை சுற்றி வரும்போது கொஞ்சம் கொஞ்சமாக சூரியன் தெரிய ஆரம்பித்து பகலாகிறது! சூரியன் இருந்த இடத்தை விட்டு நகருவதில்லை!

விளக்கு எரிகிறது!

விளக்கெங்கே எரிகிறது? அதில் ஊற்றிய எண்ணெயில் நனைந்த திரி அல்லவா எரிந்து கொண்டிருக்கிறது! விளக்குத் தீ பிடித்து எரிந்தால் அது ஆபத்து!

வண்ணாத்திப் பூச்சி:

வண்ணத்துப் பூச்சி என்பதுதான் சரி. அதன் பட்டுப் போன்ற இறக்கைகள் பல வண்ணங்களில் அழகாக இருப்பதால் அப்பெயர் வந்தது! ஆனால், அதை 'வண்ணாத்திப்பூச்சி' என்கிறார்கள்.

பாம்பு பால் குடிக்குது!

பாம்புக்கு பால் வார்த்தேன் என்பார்கள். ஆனால், பாம்பு பாலைக் குடிப்பதில்லை! அதற்கான வசதியும் அதன் வாயில் இல்லை. பாம்புக்கு பால் பிடிக்காத ஒன்று என்றும் சொல் கிறார்கள். இது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த உண்மை! சினிமாவில் பாம்பு பால் குடிப்பதெல்லாம் 'ரப்பர் ட்யூப்' செய்யும் வேலைதான்!

ஆழ்ந்த கருத்துள்ள சொற்றொடர்களை, பிறரைப் பார்த்து நாம் பிரயோகிக்கும் வழக்கம் தொன்றுதொட்டே வந்துள்ளது. உதாரணமாக, போலியாக அழுபவனைப் பார்த்து ''முதலைக் கண்ணீர் வடிக்கிறான்யா'' என்று சொல்வார்கள். பொய்யாக அழுவதற்கும், முதலைக் கண்ணீர் வடிப்பதற்கும் என்ன சம்மந்தம்? அதுபோல் தன்னை ஏமாற்ற நினைப்பவனைப் பார்த்து, ''எனக்கு எப்பவோ காது குத்தியாச்சு, இன்னைக்கு நீ குத்த வேண்டாம்'' என்பார்கள். ஏமாற்ற நினைத்தவனுக்கும், காது குத்தியதற்கும் என்ன தொடர்பு? இதற்கெல்லாம் பொருள் தெரிந்து தான் சொல்கிறார்களா? என்ற சந்தேகம் எனக்குள் எழுந்தது!

இதைப்போன்ற சொற்றொடர்களைச் சேகரித்து, அதன் பொருள் விளக்கம் தந்து, நாம் ஏன் புத்தகமாக வெளியிடக் கூடாது? என்ற எண்ணம் எனக்குள் ஏற்பட்டது!

'ஒருவரைப் பார்த்து, ஒருவர் எழுதினால் அது காப்பி! பல பேர் எழுதியதை தொகுத்து எழுதினால் அது ஆராய்ச்சி!'' என்றாராம் நேரு. இதைத்தான் நான் செய்திருக்கிறேன்.

பலர் சொல்லியதையும், பல இதழ்களில் நான் படித்ததையும் தொகுத்து என் நடையில் கொடுத்துள்ளேன். இதில் என் சொந்தக் கருத்துக்களும் பல இடம்பெற்று உள்ளன! அது எனக்குள்ள உரிமையாகவே நான் கருதுகிறேன்.

ISBN 818446196-8

Rs.35/-